

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்
குருவே துணை
ஜென்னும்
வேதாத்திரியமும்...
பாகம்- 4
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# ஜென்னும் வேதாத்திரியமும்

## பாகம் 4

## அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

### இதனுள்ளே

1. புகழும் இகழும்
2. உள்ளம் உருகி நின்றேன்
3. புத்தர் எழுப்பிய கேள்விகள்
4. புத்தரின் மகாசமாதி
5. இன்பம் நிலைக்க வழி
6. பழிப்போரையும் வாழ்த்து
7. காலம் எனக் கருதும் மனம்
8. ஞானம் என்றால்
9. எது அதிசியம்?
10. மனம் ஒரு வியப்புக்குரிய இயக்கம்
11. விழிப்பு நிலையில் வாழ்வோம்
12. முழுமையும் முழுமைப்பேறும்
13. நன்றியுணர்வும் கடமையுணர்வும்
14. அணுவே எல்லாம்
15. நினைவை சுமக்காதே
16. ஞானமடைந்த மனிதன்
17. குற்றங்களும் தண்டனைகளும்
18. புனித நிலை குருநாதர்
19. ஞானிகளின் சிறப்பு
20. ஞானநிலைகள்
21. தொண்டில் உயர்வு தாழ்வு வேண்டாம்?
22. ஆசிரியர் பெருமை
23. ஆற்றல்கள் வீணாகாது.
24. கூடி வாழும் பண்பு?
25. கோபத்தில் சத்தம் ஏன்?
26. அன்பு வழியில்

27. அன்பின் செயல்
28. உழைத்தால் சாப்பிடு
29. ஜென் குருவும் ஒன்பது திருடர்களும்
30. வைர சூத்திரம்
31. பசியும் தாகமும் தந்தது யார்?
32 .பழுத்த ஞானம்
33. வாழ்நாள் எவ்வளவு தேவை?
34. தேர் உள்ளதா?
35. உண்மையைக் காணப் பல வழிகள்
36. மகிழ்ச்சியின் இரகசியம்
37. ஞானியின் வாழ்க்கை
38. ஆன்மீக முன்னேற்றமா?
39. சீடனாக என்ன தகுதி?
40. புத்த தத்துவம் ஒரே வரியில்
41. பொறுமை தேவை

# 1.புகழும் இகழும்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜப்பானிய செல்வந்தர் ஒருவர் சம்பந்தப்பட்ட விழாவுக்கு ஜென் ஞானி காசன் அழைக்கப்பட்டிருந்தார்.

இதற்கு முன் இப்படியொரு ஆடம்பர விழாவில் அவர் கலந்து கொண்டதில்லை.

எனவே, அவருக்கு உடல் நடுக்கம் ஏற்பட்டது.

வியர்த்து கொட்டியது.

இந் நிகழ்ச்சிக்குப் பின் காசன் தன் மாணவர்களை அழைத்தார்.

“என்னை மன்னித்து விடுங்கள். நான் உங்களுக்கு ஆசிரியராக இருக்கத் தகுதியற்றவன். உலகத்தில் ஏற்படும் பிரபலத்தை சமமாகப் பாவிக்க முடியாத மனநிலையில் தற்போது இருக்கிறேன். நீங்கள் வேறு ஆசிரியரிடம் சென்று பயிலுங்கள்'' என்று கூறி விடைபெற்றார்.

பின்னர், ஒரு கோயிலில் சென்று தனிமையில் தியானம் செய்தார்.

வேறு ஓர் ஆசிரியரிடம் மாணவராகச் சேர்ந்து பயின்றார். எட்டு ஆண்டுகளுக்குப் பின் காசன் ஞானம் அடைந்தவராக புதிய மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.

### புகழும் இகழும் - வேதாத்திரியம்

“புகழ்ந்துரைக்கும் வார்த்தைகளால் பூரிப் பெய்தல்
    பொருத்தமிலாத தன்மையே வெளிப் படுத்தும்.
நிகழ்ந்த ஒன்றின் காரணமும், விளைவும் கண்டால்,
    நீஒருவன் மட்டும் அதற்குரியோன் அல்ல!
மகிழ்ந்திடுதல், வருந்திடுதல், அறிவு கொள்ளும்
    மருட்சி நிலைக்காட்டு தங்கே. ஊன்றிப்பாரீர்!
இகழ்ந்துரைகளை ஏற்று, ஏன் எழுந்தது?
    என்றாய்ந்து. திருத்துவது உயர்வு ஆகும்.” (ஞாக.பா.1618)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 2. உள்ளம் உருகி நின்றேன்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் துறவி ஒருவர் ஆற்றில் மூழ்கி தவம் செய்து கொண்டிருந்தார்.

ஒரு இளைஞன் குறுக்கிட்டு “ஐயா நான் தங்களின் சீடனாக சேர விரும்புகிறேன்” என்றான்.

ஆற்றிலிருந்து எழுந்தவர், “ஏன்?” என்றார் துறவி.

“நான் கடவுளை அறிய விரும்புகிறேன்” என்றான்.

சட்டென்று துறவி அவன் கழுத்தின் பின்புறத்தைப் பிடித்து இழுத்து, அவன் தலையை ஆற்றினுள் முக்கினார்.

சிறிது நேரத்தில் மூச்சிறைத்த இளைஞன், திமுறிக் கொண்டு வெளியே வரத் துடித்தான்.

கடைசியாக துறவி அவனைப் பிடித்து வெளியே இழுத்தார்.

வெளியில் வந்த இளைஞன் இருமிக் கொண்டு பெரு மூச்செறிந்தான்.

துறவி கேட்டார், நீ நீரினுள் மூழ்கி இருக்கும் போது உனக்கு என்ன தேவைப் பட்டது?” என்றார்.

“காற்று” என்றான் இளைஞன்.

“நல்லது, வீட்டுக்குச் செல். காற்று போல கடவுள் உனக்கு எப்போது தேவையோ அப்போது திரும்பி வா” என்று சொல்லி விட்டார்.

“உய்யும் வகை தேடி உள்ளம் உருகிநின்றேன்.
உயர்ஞான தீட்சை யினால் உள்ளொடுங்கி,
மெய்யுணர்வு என்ற பெரும் பதம் அடைந்தேன்.
மேல்நிலையில் மனம் நிலைத்த நிற்கநிற்க,
ஐயுணர்வும் ஒன்றாகி அறிவு அறிந்தேன்.
ஆசையென்ற வேகம் ஆராய்ச்சி யாச்சு.
செய்தொழில்களில் கடமை உணர்வு பெற்றேன்.
சிந்தனையில் ஆழ்ந்து பல விளக்கம் கண்டேன்.” (ஞாக.பா.9)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 3. புத்தர் எழுப்பிய கேள்விகள்

### (ஜென்னும் வேதாத்திரியமும்)

அந்த ஜென் குரு அவ்வப்போது தனது மாணவர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் மிகவும் சுருக்கமாக, எளிய முறையில் பதில் சொல்வது வழக்கம்.

அவ்வப்போது சீடர்கள் கேள்விகள் கேட்பதும் அவர் பதில் சொல்வதும் தொடரும்.

சீடர்களில், ஒருவர் மாற்றி ஒருவருக்கு ஏதாவது சந்தேகம் தோன்றிக் கொண்டே இருக்கும். அதை அவர் தீர்த்து வைப்பார்.

ஒரு சீடர், “குருவே புத்தர் ஏன் கடவுளைப் பற்றி எதுவும் பேசவில்லை” என்று கேட்டார்.

“புத்தர் எழுப்பிய இக் கேள்வி கட்குப்
    பூவுலகில் இன்றுபலர் விடைசொல் வார்கள்.
எத்தனையோ இயற்கையதன் இரகசி யங்கள்
    இதுவரையில் அறிஞர்பலர் கண்டு விட்டார்.
நித்தநித்தம் உலகநலம் நாடி அன்னார்
    நேர்மையுடன் திட்டங்கள் தீட்டு கின்றார்.
அத்தனையும் அண்மையிலே செயலாய் மாறும்
    அடிப்படையாம் பொருள்துறைசீர் திருந்தி விட்டால்.”
(ஞாக.பா.102)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 4.புத்தரின் மகாசமாதி

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

புத்தர் தன் கடைசி நேரத்தில் கூறினார்.

என் உடலை இயற்கைக்கு மீண்டும் ஒப்படைக்கப் போகிறேன்.
நான் அனேக உடல்களை பயன்படுத்தி உள்ளேன்.

ஆனால் இதற்கு முன்பு இயற்கைக்கு நன்றி சொல்லியது இல்லை
இதுதான் கடைசி.


இனி நான் உடலுக்குள் புக மாட்டேன்.
இதுதான் நான் வாழ்கின்ற கடைசி வீடு கடைசி இருப்பிடம்.

நான் என் உடலைத் திருப்பித் தர வேண்டும்.
இது அனேக வேலைகளைச் செய்து விட்டது.

இது என்னை ஞானத்திற்கு இட்டுச் சென்றது.
இது நல்ல சாதனமாக இருந்தது.
இது எல்லா வகையிலும் எனக்கு உதவியாக இருந்தது.

ஆகவே இயற்கைக்கு நன்றி சொல்லி விட்டு
இந்த வீட்டை திருப்பி கொடுக்க வேண்டும்.

ஏனெனில்




இந்த உடல் இயற்கை எனக்கு கொடுத்த வெகுமதி.
நான் முழு உணர்வுடன் இதைக் கொடுக்க வேண்டும்.

அதன் பிறகு அவர் தன் உடலை ஒப்படைத்தார்.
அவர் உடலைச் சுற்றி ஒரு ஒளி இருந்தது.

அவர் உடல் சக்தியாக மாறி இந்தப் பிரபஞ்சத்துடன் கலந்து விட்டது.

அவருடைய மரணம் உள்ளுணர்வுடன் கூடிய மரணம்.
பிறகு அவர் தனது மனதை ஒப்படைத்தார்.
அப்பொழுது நறுமணம் பரவியது.
புத்தரின் மனம் ஒரு நறுமணம்தான்.
கள்ளங் கபடமற்ற தூய்மையான வாழ்க்கையின் நறுமணம்.
பிறகு அவர் தன் ஆன்மாவை ஒப்படைத்தார்.

இந்த மூன்று விஷயங்களும் ஒப்படைக்கப் பட்ட பின்னரே அவர் இறந்தார்.
இதுதான் மகா பரி நிர்வாணம்
இதுதான் மகாசமாதி. வீடுபேறு.

"வெட்டவெளி பிரபஞ்சப் பொருள்கட் கெல்லாம்
வீடாகும். விண்கடந்து வானறிந்தால்,
வெட்டவெளி அணுஅறிவு ஒன்றாய்ப் போகும்.
வீடுபேறு எனும் உயர்ந்த பதமும்மாதே!"
(ஞாக.பா.1848)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 5.இன்பம் நிலைக்க வழி

## (ஜென்னும் வேதாத்திரியமும்

ஜென் குரு தன் மாணவர்களுக்கு சொன்ன கதைகளில் இதுவும் ஒன்று.

ஒருமுறை அவர் தன்னம்பிக்கை பற்றிய பாடத்தை நடத்திக் கொண்டிருந்தார்.

அப்போது அந்த வழியே ஒரு எறும்பு உணவுப் பொருளைத் தூக்கியபடி சென்று கொண்டிருந்தது.

அதை மாணவர்களுக்குக் காட்டினார் குரு.

அனைத்து மாணவர்களும் எறும்பின் செயலையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தனர்.

எறும்பு செல்லும் வழியில் ஒரு சிறிய விரிசல் இருந்தது. அதை எப்படித் தாண்டிச் செல்வது என்று சிறிது நேரம் நின்ற ஏறும்பு உடனே தான் கொண்டு வந்த உணவுப் பொருளை அந்த விரிசலின் மீது வைத்தது.

பின்னர் அதன்மீது ஏறி மறு பக்கம் சென்றது. மீண்டும் உணவுப் பொருளை இழுத்துச் செல்லத் தொடங்கியது.

“நமக்கு ஏற்படும் துன்பத்தையே பாலமாக வைத்து நாமும் முன்னேற முடியும்” என்று விளக்கினார் குரு.

“துன்பம் குறைந்திட இன்பம் நிலைத்திடும்!
இன்பம் பெருக்கிடத் துன்பம் விளைந்திடும்!” (ஞாக.பா.538)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 6. பழிப்போரையும் வாழ்த்து

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் துறவி பரங்கை அவர்கள் எல்லோரையும் கவரும் வகையில் பேசும் பேச்சாற்றல் கொண்டவர்.

கடினமான தத்துவங்களையும் கேட்பவர்கள் எளிதாகப் புரிந்து கொள்ளும் வண்ணம் பேசுவதில் வல்லவர்.

அவர் பேச்சு வெளிப்படையாகவும் நேரடியாகவும் இருக்கும். சுற்றி வளைத்துப் பேச மாட்டார்.

அவர் எங்கே பேசினாலும் அங்கே பெருங்கூட்டம் கூடியது. அந்தக் கூட்டத்தில் ஜென் சமயத்தவர் அல்லாமல் பலரும் இருந்தார்கள்.

அவருக்குக் கிடைத்த புகழைக் கண்டு நிசிரன் சமயத்தைச் சேர்ந்த துறவி ஒருவர் பொறாமை கோண்டார்.

எல்லோர் முன்னிலையிலும் துறவி பரங்கையை அவமானப்படுத்த வேண்டும். அதற்கு என்ன செய்வது என்று சிந்தித்தார்.

நல்ல வழி ஒன்று அவருக்குத் தோன்றியது.

துறவி பரங்கையின் அருளுரை நிகழும் இடத்திற்குச் சென்றார். அங்கே பெருங் கூட்டம் கூடி இருந்தது.

அருளுரை வழங்க துறவி பரங்கை வந்து அமர்ந்தார்.

"ஜென் துறவியே! உன்னை மதிப்பவர்கள் உன் பேச்சைக் கேட்டு நடப்பார்கள். நான் உன்னை மதிப்பது இல்லை. அதனால் உன் பேச்சைக் கேட்டு நடக்க மாட்டேன். எல்லோரையும் உன் பேச்சால் மயக்கி விடுகிறாய் என்கிறார்கள். முடியுமானால் உன் பேச்சைக் கேட்டு என்னை நடக்க வை. உன் திறமை முழுவதையும் பயன்படுத்து பார்ப்போம்" என்று சவால் விட்டார்.

இதைக் கேட்ட பரங்கை "துறவியே! கூட்டத்தினர் உங்களுக்கு வழி விடுவார்கள். என் முன்னே வாருங்கள்" என்றார்.

பெருமிதத்துடன் கூட்டத்தினரை விலக்கிப் பரங்கையின் முன் வந்து நின்றார் அவர்.

புன்முறுவல் செய்த பரங்கை "நீங்கள் பேசுவது எனக்குத் தெளிவாகக் கேட்க வேண்டும். என் வலது பக்கம் வந்து நின்று பேசுங்கள்" என்றார்.

எப்படித் தன் பேச்சைக் கேட்க வைப்பார். பார்த்து விடுகிறேன் என்று பெருமிதமாக பரங்கையின் வலது பக்கம் வந்து நின்றார்.

இந்த இடமும் நீங்கள் பேசுவதைக் கேட்பதற்கு ஏற்றதாக இல்லை. முன்பு இருந்த இடத்திற்கே வாருங்கள்" என்றார்.

பழைய இடத்திற்கே சென்றார்.

நீங்கள் நல்ல மனிதர். அதனால்தான் என் பேச்சிற்கு மூன்று முறை கீழ்ப்படிந்து நடந்தீர்கள். நீங்கள் நிற்கும் இடத்திலேயே அமர்ந்து அமைதியாக என் பேச்சைக் கேளுங்கள்" என்று தன் அருளுரையைத் தொடங்கினார் பரங்கை.

"தூய்மையெனில் பழிச்செயல்கள் பதிவு நீக்கம்,
துன்பஅனு பவமாக இயற்கை நல்கும்.
ஆய்வுதனக் குள் ஆற்றி, அகத்தே நிற்க
அறிவுஒளி யில் அறத்தின் நெறி விளங்கும்.
தேய்வுபெறும் பலவினைகள். இதை உணர்த்தும்
திரு விளையா டற்குறிப்பே அன்பர் தூற்றல்.
ஓய்வு உளத்தில் கொண்டு, வாழ்த்தி வாழ்த்தி
உளமகிழ்வைப் பழிப்போர்க்கு அர்ப் பணிப்போம்." (ஞாக.பா.591)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 7. காலம் எனக் கருதும் மனம்

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

தெக்கிதூ என்ற ஜென் குரு படுக்கையில் இறுதி காலத்தில் இருந்தார்.

அவர் இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பே தொடர்ந்து அவரது படுக்கையின் பக்கத்தில் காசன் என்ற பிரதம சீடர் அமர்ந்திருந்து அவரைக் கண்காணித்து வந்தார்.

காசன்தான், அவருக்கு அடுத்த படியாக அந்தத் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளப் போகிறவர்.

பக்கத்தில் உள்ள ஒரு சரிந்த கோவிலை, புதிதாக நிர்மாணிப்பதில் காசன் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

தெக்கிசூ, காசனிடம், “அந்தக் கோயிலை முடித்தபிறகு, நீ என்ன செய்யப் போகிறாய்?” என்று கேட்டார்.

காசன், “உங்களுடைய உடல் தேறியபிறகு நீங்கள்தான் அங்கு முதலில் பேச வேண்டும்”

“அதுவரைக்கும் நான் உயிரோடு இல்லை என்றால்?”

“வேறு யாரையாவது ஏற்பாடு செய்வோம்”

“அப்படி யாரும் கிடைக்கா விட்டால்?”

இப்பொழுது காசன் சத்தமாக, “இதைப் போல முட்டாள்தனமாகக் கேள்வி கேட்காதீர்கள்.  வெறுமனே ஓய்வாகத் தூங்குங்கள்” என்று சொன்னார்.

இங்கு, தன் குரு, தன் கடைசிக் காலத்தில் எதிர்காலத்தைப் பற்றி நினைப்பது, சீடனுக்குப் பிடிக்கவில்லை.

ஜென் எப்பொழுதும் இறந்தகால மற்றும் எதிர்கால நிகழ்வுகளுக்கு எதிரிதான்.

## காலம் – வேதாத்திரியம்

“இறைநிலையோ தூயவெளி, இருப்பாற்றல் தெய்வம்.
இறுக்கமெனும் பேரழுத்தம் இதன் தன்மையாகும்.
நிறைவான இவ்வியக்கம் விட்டு விட்டழுத்த,
நேரளவில் நுண்ணதிர்வாய் நீடிக்கும். விளைவாய்,
முறையாக இறைவிண்ணாய், மேலும் பூதம் ஐந்தாய்,
மொழிய முடியாஅளவில் விரிந்தியக்கம் பெற்ற,
மறைவிளக்கும் பிரபஞ்ச பரிணாமம் ஆச்சு!
மனம் இந்த நுண்ணதிர்வைக் காலம் எனக் கருதும்,”
(ஞாக.பா.1787)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 8. ஞானம் என்றால்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

முழுமையான ஞானம் என்பது என்ன? என்று ஒரு அறிஞருக்கு சந்தேகம் வந்தது.

முதலில் ஒரு ஜென் துறவியைச் சந்தித்த அவர் தனது சந்தேகத்தைக் கேட்டார்.

அவரை மேலும் கீழுமாகப் பார்த்த துறவி, “இப்படி பளபளவென்று ஆடை அணிந்திருந்தால் உனக்கு எப்படி ஞானம் கிடைக்கும்?” என்று எதிர் கேள்வி கேட்டார்.

உடனே தனது பகட்டான ஆடைகளைத் துறந்த அறிஞர் தொடர்ந்து பயணப்பட்டார்

அடுத்து ஒரு ஜென் துறவியை சந்தித்தார். அவரிடமும் அதே கேள்வியைக் கேட்டார்.

“காலையில் என்ன சாப்பிட்டாய்?” என்று அந்தத் துறவி கேட்டார்.

அவர் சாப்பிட்ட பொருள்களையெல்லாம் வரிசையாகக் கூறினார்.

அதைக் கேட்ட துறவி, "இப்படிச் சாப்பிட்டால் எப்படி உண்மையான ஞானம் கிடைக்கும். இனிமேல் தினமும் பிச்சை எடுத்துத்தான் சாப்பிட வேண்டும். அதுவும் ஒரு நாளைக்கு ஒரு கைப்பிடிதான் சாப்பிட வேண்டும்" என்று கூறிய துறவி தன் வழியில் சென்றார்.

அதையும் விடாமல் கடைப்பிடித்தபடி தன் பயணத்தைத் தொடர்ந்தார் அறிஞர்.

அவர் சந்தித்த ஒவ்வொரு துறவியும் தங்களுக்குத் தெரிந்த ஒவ்வொரு விஷயத்தைப் பற்றிக் கூறினார்கள்.

அவற்றை ஒன்று விடாமல் கடைப்பிடிக்க ஆரம்பித்தார். தாடி வளர்த்தார். ஒரு கட்டத்தில் உலக சுகங்களையெல்லாம் துறந்த பிறகும் கூட அவருக்கு ஞானம் கிடைத்த பாடில்லை.

ஒரு மரத்தடியில் இளைப்பாற அமர்ந்தபோது தன் நிலையை நினைத்து அவருக்கே பரிதாபமாக இருந்தது. வாய்விட்டுப் புலம்பினார்.

அருகில் அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு துறவி, "ஆடையைத் துறந்தாய், சாப்பாட்டைத் துறந்தாய், இன்னும் என்ன வெல்லாமோ துறந்தாய். ஆனால் நீ ஞானத்தைத் தேடுகிறோம் என்ற எண்ணத்தைத் துறக்கவில்லையே, முதலில் தேடுவதை நிறுத்து. ஞானம் தானாகக் கிடைக்கும்" என்றார்.

"ஞானம் என்றால் மனஇயக்க இயல்பறிந்து,
  நான்என்ற இயற்கைத் தத்துவம்உணர்ந்து,
மோனமென்ற ஒன்றாயும், மோகமாதி
  மூவிரண்டு குணங்களாய்ப் பரிணா மத்தால்
ஆனபொருள் அனைத்திலும், தான் அறிந்து நிற்கும்
  அளவாயும் அமையும் அறிவெல்லை கண்டு
மானம், மரியாதை, உடல் ஒழுக்கம் காத்து,

மனிதரிடை மனிதராய் வாழ்தல் ஆகும்." (ஞாக.பா.1387)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 9. எது அதிசியம்?

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ரயுமான் கோயிலில், பாங்கே என்ற ஜென் குரு போதனை செய்யும் பொழுது, "அன்பே புத்தர்" என்ற மந்திரத்தை பல தடவை மீண்டும் மீண்டும் சொல்லி குறைகளை நிவர்த்தி செய்வதாக நம்புகிறார்.

அந்த ஜென் குருவிடம் நிறைய சீடர்கள் இருப்பதைக் கண்டு சீன்சூ சந்நியாசி, அவரிடம் பொறாமை கொண்டார்.

அவரோடு வாதிட்டு, அவரைத் தோற்கடிக்க வேண்டும் என்று முடிவு செய்தார்.

பாங்கே போதனை செய்து கொண்டு இருக்கும் பொழுது, ஒரு நாள் அந்த சந்நியாசி இடையில் புகுந்து சம்மந்தமில்லாமல் பேசி தொந்திரவு கொடுத்துக் கொண்டே இருந்தார்.

ஒரு கட்டத்தில் பாங்கு. தன் பிரசங்கத்தை நிறுத்தி விட்டு,.அவரை கேட்க நினைத்தார்.

அந்தச் சந்நியாசி, "எங்களுடைய மதப்பிரிவை ஏற்படுத்தியவர், ஆற்றின் ஒரு கரையில் நின்று கொண்டு ஒரு தூரிகையைக் கையில் ஏந்தி, அடுத்த கரையில் தன்னுடைய வேலையாள் ஒரு வெற்றுக் காகித்தைப் பிடித்ததுக் கொண்டு நின்றிருந்தால்,

இவர் இங்கு இருந்தபடியே. தெய்விகப் பெயரான அமிதாவை, காற்றிலேயே எழுதி, அந்தப் பேப்பரில் விழும்படி செய்யும் அற்புத ஆற்றலைப் பெற்றவர்.

உங்களால் அதைப் போல அற்புதச் செயலைக் காட்ட முடியுமா?" என்று பெருமையாகப் பேசி. சவால் இட்டார்.

அதற்கு பாங்கே எளிமையாக, "ஒருக்கால் உங்களுடைய தலைவர் ஏதோ தந்திரம் செய்திருக்கலாம். ஆனால், ஜென்னில் அப்படி ஒன்றும் கிடையாது."

என்னுடைய அற்புதம் என்னவென்றால், "எனக்குப் பசி எடுக்கும் பொழுது, உண்ண மட்டுமே செய்வேன். அதைப் போலத் தாகம் எடுக்கும் பொழுது, நீரை அருந்தி தாகத்தை மட்டுமே தணிப்பேன். அவ்வளவுதான்" என்றார்.

## எது சித்து? – வேதாத்திரியம்

"சித்துக்கள் என்றே பலரின் சிந்தனையை மயக்கிட்டு
எத்தனையோ அற்புதங்கள் இயற்றிக் காட்டும் நண்பா!
நித்தம்எழும் உன்பசியை நிச்சய மாய்ப் போக்குவது
உத்தமனாம் பயிரிடுவோன் உழைத் தளிக்கும் உணவன்றோ?"
(ஞாக.பா.5384

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 10. மனம் ஒரு வியப்புக்குரிய இயக்கம்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

போதி தர்மர் யாரையும் தன்னுடைய சீடனாக ஏற்றுக் கொள்ளவில்லை.

ஒரு மலைப் பகுதியில் தனியே தங்கியிருந்து தியானம் செய்வது அவருடைய வழக்கம். பழக்கமாக இருந்தது.

அவர் இருக்கும் இடத்தைத் தேடிக் கொண்டு படித்த ஒரு இளம் துறவி "என்னை உங்கள் சீடனாக ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று வேண்டினார்.

அவரை அங்கிருந்து அனுப்பிவிட வேண்டுமென்று போதி தர்மர் முயற்சித்த போதும் அவர் அங்கிருந்து போவதாக இல்லை.

"எனக்கு எப்படியாவது நீங்கள்தான் உதவ வேண்டும்"

"என்ன பிரச்சனை உனக்கு, நான் எப்படி உதவ முடியும்?"

"என் மனதில் அமைதியே இல்லை. நீங்கள்தான் அதை எப்படியாவது அமைதிப்படுத்த வேண்டும்"

"முதலில் உன்னுடைய மனது எங்கிருக்கிறது என்று காட்டு, அதைப் பிறகு அமைதிப்படுத்தலாம்"

சிறிது நேரம் யோசித்தபோதும் அவரால் மனதைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

"என்னால் மனதைக் கண்டுபிடிக்க முடியவில்லை"

"நல்லது. அப்படியென்றால் நான் உன்னுடைய மனதை ஏற்கனவே அமைதிப்படுத்தி விட்டேன் என்று அர்த்தம்" என்று போதிதர்மர் கூறிய அந்த விநாடியில் இளம் துறவிக்கு ஞானம் பிறந்தது.

அதன்பிறகு அவர் போதி தர்மரிடம் சீடராகச் சேரவேண்டிய அவசியம் இல்லாமல் போயிற்று.

## மனம் ஒரு வியப்புக்குரிய இயக்கம்

"பிறப்பு சிறப்பொடு விளைவு உணர்வு நான்கும்,
பேரண்டத்தில் தொடர்ந்த நிகழ்ச்சி ஆகும்.

இறப்புஎனும் மறைவு எதற்கும் எவர்க்கும் இல்லை.
    எல்லாமே அணுக்கள் கூடல் பிரிதல் ஆகும்.
திறப்பு பெற்றால், மனிதமனம் அனைத்தும் அதனில்
    தெளிவாகும், அனைத்துலக உண்மை யாவும்.
மறப்பும் நினைப்பும் உறக்கம் விழிப்புப் போன்றே.
    மாறிமாறி மனம் அடையும் விந்தை! காண்பீர்" (ஞாக.பா.538)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 11. விழிப்பு நிலையில் வாழ்வோம்

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

யாக்குசான் என்ற ஒரு ஜென் குருவோடு, ஒரு சந்நியாசி, சுமார் மூன்று வருட காலம் தங்கி. அங்கே தலைமைச் சமையல்காரராக வேலை செய்து வந்தார்.

ஒருநாள் யாக்குசான் அவரிடம், நீங்கள் எவ்வளவு நாட்களாக இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு யாக்குசான், "நான் உங்கள் முகத்தைப் பார்த்ததாக நினைவே இல்லையே?" என்று ஆச்சரியமாகச் சொன்னார்.

இதைக் கேட்ட சுத்தச் சந்நியாசி, யாக்குசான் எதை அர்த்தம் பண்ணி அப்படிச் சொன்னார் என்று புரிந்து கொள்ள முடியாமல், மிகவும் சோகமாக அந்த மடாலயத்தை விட்டு வெளியேறினார்.

ஆனால், யாக்குசான் அவர்மேல் மிகுந்த கருணை உடையவராக இருந்தார். ஆனால் அந்த ஓர் அதிர்ஷ்டம் வாய்த்த சந்நியாசி அதை இழந்து விட்டார்.

இங்கே, யாக்குசான், “நீங்கள் எத்தனை வருடமாக இருக்கிறீர்கள்? “ என்று கேட்கவில்லை.

மாறாக, அவர். “நீங்கள் “இங்கே” எத்தனை வருடமாக இருக்கிறீர்கள்,” என்று கேட்டார்.

இங்கு “இங்கே” என்ற வார்த்தை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அதாவது, “நீங்கள் எத்தனை வருடமாக” இங்கே (இந்தக் கணம்) இப்பொழுது இருந்தீர்கள்?” என்று அர்த்தம்.

ஜென் எப்பொழுதும், “இங்கே”, “இப்பொழுது” என்று நிகழ் காலத்திற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கிறது. இதை அந்த சந்நியாசியால் புரிந்து கொள்ள முடியவில்லை.

“நீங்கள் ஒரு நாளைக்கு எத்தனை தடவை, “இங்கே, இப்பொழுது” இருந்தீர்கள் என்று நினைவுபடுத்தி பாருங்கள். சுமார் பத்து தடவைகூட இருக்காது! நீங்கள் “இங்கு, இப்பொழுது” இருந்திருக்கலாம். ஆனால் உங்கள் மனம்?

இந்த எண்ணிக்கையை மெல்ல அதிகப் படுத்துங்கள். இதுவே தியானம் ஆகும் என்பார் ஓஷோ.

“விழிப்பு நிலை என்றஅருள் வெளிச்சம் கொண்டு,
விருப்பு வெறுப்பெனும் சுழலில் அலை மனத்தின்
அழுக்கற, தற்சோதனையில் முனைந்திடுங்கள்.
அன்பூற்றால் கடமையுணர் வாகும் வாழ்வு.” (ஞாக.பா.1498)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 12. முழுமையும் முழுமைப்பேறும்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

பாசு என்ற ஜென் ஆசிரியர், தன் மாணாக்கர்களிடம், புத்தத் தன்மையை, "முழுமை" என்று அழைக்கலாமா? என்று கேட்டார்.

அதற்கு ஒரு மாணவன், "கூடாது" என்றான்.

இதைக் கேட்டதும் அந்த ஜென்குரு புன்முறுவல் பூத்தார்.

"நிறைவடைந்த குருமூலம் நேர்முகமாய்க்
குண்டலினி யோகம் கற்று,
நித்தவம் ஆழ்ந்தாற்றி, உண்மை
உணரப் பெற்றால் முனைப்பு போகும்.

இறைவனது பகுதிநிலை உயிர் மனமாய்த்
தேர்ந்து. அதன் உறைவிடமாம்
உடலதுவோ சமுதாயம் உற்பத்தி
செய்துபல பொருட்கள் ஈந்து,

முறையாக வளர்த்து பண்பாட் டுடனே
கல்வி தொழில் காப்பு தந்த
முழுக்கதையும், சிந்தனையின் முதிர்ச்சி யினால்
உணர்ந்து. வினைப்பதிவாய்ப் பெற்ற

கறைநீங்க, உயிரதனை இறை நிலைக்கும்
கனஉடலைச் சமூகத்திற்கும்
கனிவுடனே அர்ப்பணிக்கும் தகைமை
வரும். இந்நிலையே முழுமைப்பேறாம்!" (ஞாக.பா.1497)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 13. நன்றியுணர்வும் கடமையுணர்வும்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜப்பான் நாட்டில் எங்சரு என்ற ஜென் துறவி இருந்தார். சிறந்த ஆசிரியராக விளங்கிய அவரிடம் கல்வி கற்க நிறைய மாணவர்கள் வந்த வண்ணம் இருந்தார்கள்.

மாணவர்கள் எண்ணிக்கை அதிகமானதை அறிந்த அவர் அவர்கள் தங்குவதற்காக பள்ளிக்கூடம் கட்ட நினைத்தார்.

இதை அறிந்த வணிகன் ஒருவன் ஐந்நூறு பொற்காசுகளை அவர் முன் வைத்தான். "ஐந்நூறு பொற்காசுகள்" என பெருமிதத்துடன் சொன்னான்.

"பொற்காசுகளை எடுத்துக் கொள்கிறேன்" என்றார் அவர்.

பெரிய அளவில் பாராட்டி நன்றி சொல்வார் என்று எதிர்பார்த்த அவன் ஏமாற்றம் அடைந்தான்.

"ஐயா! இதில் ஐந்நூறு பொற்காசுகள் உள்ளன. வாழ்நாள் முழுவதும் உழைத்தாலும் ஒருவனால் இவ்வளவு பொற்காசுகளை ஈட்ட முடியாது. நான் செல்வம் மிகுந்த வணிகன்தான். எனக்கே இந்த ஐந்நூறு பொற்காசுகள் பெரிய தொகைதான்" என்றான்.

"உனக்கு நான் நன்றி சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறாய். அப்படித்தானே?" என்று கேட்டார் அவர்.

"நான் செய்த பெரிய உதவிக்கு நீங்கள் நன்றி சொல்வதில் என்ன தவறு?" என்று கேட்டான் அவன்.

"நான் ஏன் உனக்கு நன்றி சொல்ல வேண்டும்? நல்ல செயலுக்கு உதவி செய்ய உனக்கு வாய்ப்பு கொடுத்ததற்காக நீதான் எனக்கு நன்றி செல்ல வேண்டும்" என்றார் அவர்.

என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் திகைத்து நின்றான் அவன்.

"நன்றியுணர்வும் கடமையுணர்வும் ஒன்றிணைந்து
நலம் விளைக்கும் செயல்களையே விளைவறிந்து ஆற்ற
ஒன்றுமதம் இது "கர்ம யோகம்" எனும் வாழ்வாம்.
உயிர்கட்கு உறுதுணையாம் உலகுக்கும் அமைதி." (ஞாக.பா.538)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 14. அணுவே எல்லாம்

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் துறவி லின்சி யாரிடமும் கோபம் கொண்டது இல்லை.

அவரைச் சந்திப்பதற்காக ஒருவர் பல நாட்கள் பயணம் செய்து அங்கே வந்தார்.

என்ன காரணத்தாலோ வந்தவர் கோபம் கொண்டிருந்தார்.

துறவியின் அறைக் கதவைத் திறந்து உள்ளே வந்த அவர் கோபத்துடன் அந்தக் கதவை மூடினார்.

துறவியை வணங்கினார்.

அவர் கோபத்துடன் கதவு மூடியதை பார்த்தார் துறவி. "கதவிடம் நீ மன்னிப்பு கேள், மன்னிப்பு கேட்க விருப்பம் இல்லாவிட்டால் இங்கிருந்து சென்றுவிடு" என்றார்.

அதிர்ச்சி அடைந்த அவர் "கதவிடம் மன்னிப்பு கேட்பதா? உயிர் அற்ற பொருளிடம் மன்னிப்பு கேட்பது பைத்தியக்காரத்தனமாக உங்களுக்குத் தெரியவில்லையா?" என்று கேட்டார்.

“எது பைத்தியக்காரத்தனம்? உன் கோபத்தைக் கதவிடம் காட்டினாயே அது பைத்தியக்காரத்தனமா? மன்னிப்பு கேட்பது பைத்தியக்காரத்தனமா? கதவு மன்னிக்காத வரை உன்னை இங்கே அனுமதிக்க மாட்டேன்” என்று உறுதியுடன் சொன்னார் துறவி.

பல நாட்கள் பயணம் செய்து இங்கே வந்தேன். இவரைச் சந்திக்காமல் போவதா? கதவிடம் மன்னிப்பு கேட்க பகுத்தறிவு இடம் தரவில்லையே என்று குழம்பினார் அவர்.

துறவி சொன்னது போல் செய்வோம் என்று நினைத்தார்.

கதவின் அருகே சென்ற அவர் “கதவே! என் செயலுக்கு வருந்துகிறேன். என்னை மன்னித்துவிடு” என்று உள்ளம் ஒன்றிக் கேட்டார்.

அவருக்கு அங்கே இருந்த துறவியோ மற்ற பொருள்களோ தெரியவில்லை. கதவு மட்டும்தான் தெரிந்தது.

அவர் செய்த தவறை மன்னித்துக் கதவு அவரிடம் அன்பு செலுத்தவதாக உணர்ந்தார்.

துறவி அவரைப் பார்த்து “இனி நாம் பேசலாம்” என்றார்.

பல நாட்கள் துறவியுடன் தங்கிய அவர் அவருடைய அறிவுரைகளைக் கேட்டார்.

## அணுவே எல்லாம் – வேதாத்திரியம்

“அற்புதம்! அற்புதம்! அணுதான் முதல்காந்த நிலையமாம்!
அகில தோற்றங்களும் அதனின் இயக்கமே. அகம்நோக்கி,
தற்பதங்கண்டபின் தான்ஒரே சக்தியாய் பெருவெளியாய்
தன்அசைவு அணுவான தன்மையும் உணர்கிறோம். தத்துவமே.”
(ஞாக.பா.1026)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 15. நினைவை சுமக்காதே

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

துறவி ஜோசு என்பவர் ஜென் புத்த தத்துவங்களைக் கற்பதில் மிகுந்த ஆர்வம் காட்டினார்.

அறுபது வயது ஆகியும் அவர் கற்பதை நிறுத்தவில்லை.

எண்பதாவது வயதில் அவருக்கு ஞானம் கிடைத்தது.

நூற்று இருபது வயது வரை அவர் ஜென் தத்துவங்களை மற்றவர்களுக்குச் சொல்லித் தந்தார்.

அவரிடம் நிறைய சீடர்கள் கல்வி கற்று வந்தார்கள்.

அவர்களில் ஒருவர் “என் மூளைக்குள் எதுவும் இல்லை என்றால் நான் என்ன செய்வது?” என்று கேட்டார்.

“அதைத் தூக்கி எறிந்துவிடு” என்றார் அவர்.

“குருவே! நான் ஒன்றும் இல்லை என்கிறேன். நீங்கள் அதைத் தூக்கி எறியச் சொல்கிறீர்கள். இல்லாத ஒன்றை எப்படித் தூக்கி எறிவது?” என்று கேட்டார் அந்தச் சீடர்.

“தூக்கி எறிய முடியாவிட்டால் சுமந்து கொண்டு திரி” என்றார் அவர்.

நினைவை அடக்க நினைத்தால் நிலையா,
நினைவை அறிய நினைத்தால் நிலைக்கும்.” (ஞாக.பா.1551)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 16. ஞானமடைந்த மனிதன்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

சோகன் என்ற ஜென் குரு, தன் மாணாக்கர்களிடம், “ஏன் ஒரு ஞானமடைந்தவன் தன் சொத்தக் காலில் நின்று தன்னையே விளக்க முடியவில்லை” என்று கேட்டார்.

மேலும் அவர், “தன் நாக்கிலிருந்து வார்த்தைகள் வர வேண்டிய அவசியம் இல்லை” என்றார்.

மனதின் அறிவியக்க நிலைகள் மூன்று – வேதாத்திரியம்

“மனம் என்தறிவினது செயல்பா டாகும்.
மதிப்புடைய அறிவியக்க நிலைகள் மூன்று.
மனம் புறமாய், புலன் மூலம் இன்ப துன்ப
மருட்சியிலே இயங்குநிலை ஒன்று. பின்னும்
மனம் கருவில் பதிவான வினைகள் தம்மை
மருவியுணர் நிலையொன்று. அதற்கு மேலாம்
மனம் உலகை உயிரைக் கடந்தாதியான
மவுனநிலை நிற்பதொன்று. உணர்ந்து கொள்வோம்”
(ஞாக.பா.1179)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 17.குற்றங்களும் தண்டனைகளும்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

இரவு நேரம், மடத்தில் துறவி சிசிரி கோசின் தனியாக அமர்ந்து இருந்தார். திருடன் ஒருவன் அங்கே வந்தான். அவன் கையில் கூர்மையான கத்தி ஒன்று இருந்தது.

அவரின் அருகே வந்த அவன் "பணத்தைக் கொடு. இல்லையேல் உன்னைக் கொன்று விடுவேன்" என்று மிரட்டினான்.

"எனக்கு நிறைய வேலை உள்ளது. தொல்லை தராதே. அந்த மேசை இழுப்பில் பணம் உள்ளது. எடுத்துக் கொள்" என்றார்.

மேசை இழுப்பை இழுக்க அவன் அதில் இருந்த பணத்தை எடுத்தான்.

"எல்லாப் பணத்தையும் எடுத்துச் சென்று விடாதே. அரசுக்கு வரி கட்ட வேண்டிய பணம் தனியே அங்கே உள்ளது. அதை மட்டும் வைத்து விட்டுப் போ" என்றார்.

தனியே இருந்த பணத்தை அவன் தொடவில்லை. மற்ற பணத்தை எல்லாம் எடுத்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டான்.

"அன்பனே! யாராவது பரிசு கொடுத்தால் நன்றி சொல்ல வேண்டும். இது உனக்குத் தெரியாதா?" என்று கேட்டார்.

நன்றி சொல்லிவிட்டுச் சென்றான் அவன்.

அடுத்தநாளே அவன் காவலர்களிடம் சிக்கிக் கொண்டான்.

தான் செய்த திருட்டை எல்லாம் சொன்ன அவன் மடத்தில் திருடியதையும் சொன்னான்.

சாட்சி சொல்வதற்காகத் துறவி சிகிறி நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டார். "உங்கள் மடத்தில் இவன் திருடினானா?" என்று கேட்டார் நீதிபதி.

“என்னைப் பொறுத்த வரையில் இவன் திருடன் இல்லை. மடத்திற்கு வந்த இவனிடம் நான் தான் பணம் தந்தேன். எனக்கு நன்றி சொன்னான்” என்றார் அவர்.

மற்ற இடங்களில் திருடியதற்காக அவனுக்குத் தண்டனை கிடைத்தது.

தண்டனை முடிந்து திரும்பிய அவன் அவர் சீடர்களில் ஒருவன் ஆனான்.

“குற்றங்கள் செய்வதற்கே நிர்பந்திக்கும்
குறுகிய நோக்கங்கள் தமை வேரறுத்து,
குற்றமற்ற அறிவுடனே உலக மக்கள்
கூடிவாழும் உலகப் பொது ஆட்சியின்கீழ்
குற்றங்களை வகுத்து விரித்துக்கூறி
கொடுக்கும் தண்டனை விபரம் எடுத்துரைக்கும்
குற்ற விளக்கச் சட்ட நூல்கள் எல்லாம்
குறுகி சில வரிகளுக்குள் முடிந்துபோகும்.” (உலக சமாதானம் பா.187)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 18. புனித நிலை குருநாதர்

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென்குரு சாங்காயிடம் நிறைய சீடர்கள் தங்கித் தியானம் பயின்று வந்தார்கள்.

அவர்களில் ஒருவன் நள்ளிரவில் மடத்து மதில் சுவரில் ஏறி வெளியே குதிப்பான். பக்கத்தில் உள்ள நகரத்திற்குச் செல்வான். அங்கே மகிழ்ச்சியாக சுற்றிக் கொண்டிருப்பான்.

இரவு நேரம், சீடர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்பினார் குரு சாங்காய். சீடர்கள் தங்கும் அறைக்கு வந்தார்.

எல்லோரும் தூங்கிக் கொண்டு இருந்தார்கள். ஒரு சீடன் படுக்கும் இடத்தில் மெத்தையும் தலையணையும் கிடந்தது.

அவர்களில் ஒருவன் அங்கே இல்லாததை அறிந்தார் அவர்.

எங்கே சென்று இருப்பான் என்பதை அறிய மடத்தைச் சுற்றி வந்தார்.

மதில் சுவர் அருகே முக்காலி ஒன்று கிடந்தது.

இந்த முக்காலியில் ஏறிச் சுவர் உச்சிக்குச் சென்று அங்கிருந்து குதித்து வெளியே சென்று இருக்கிறான். எப்படியும் பொழுது விடிவதற்குள் திரும்பி விடுவான் என்று நினைத்தார்.

விடியத் தொடங்கியது. முக்காலியை எடுத்துப் பழைய இடத்தில் வைத்தார். முக்காலி இருந்த சுவர் ஓரம் குனிந்து தன் முதுகைக் காட்டியபடி இருந்தார்.

வெளியே சென்ற மாணவன் திரும்பி வந்து சுவர் மீது ஏறினான். முக்காலி என்று நினைத்து அவர் முதுகில் கால் வைத்து இறங்கினான்.

இறங்கிய பிறகுதான் குருவின் முதுகில் கால் வைத்ததை அறிந்தான். என்ன தண்டனை கிடைக்கப் போகிறதோ என்று நடுங்கினான்.

கடுமையான குரலில் அவர் "இந்தக் குளிரில் இந்த நேரத்தில் வெளியே சென்று வருகிறாயே? உன் உடல் நலம் கெட்டு விடாதா? இனி இப்படி நடந்து கொள்ளாதே.. கவனமாக இரு" என்று சொல்லி விட்டுச் சென்றார்.

அதன் பிறகு அவன் இரவில் வெளியே செல்வதை விட்டு விட்டான்.

புனித நிலை குருநாதர் – வேதாத்திரியம்

“பூஜ்ஜியத்தைப் போல் நிறைவாய்ப்
   பொருத்த முள சிறப்புடையோர்
பூஜ்ஜியர் எனப் படுவர்
   புனித நிலை குருநாதர்.” (ஞாக.பா.14)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 19. ஞானிகளின் சிறப்பு

(ஜென்னும் வேதாத்திரியமும்)

வயதில் முதிய ஒரு ஜென் குரு இருந்தார். அவருக்கு ஒரு கால் சற்றே ஊனம். அதனால் விந்தி விந்தித்தான் நடப்பார்.

வயதுதான் அதிகமாகியதே தவிர அவரைப் பார்த்தால் இளைஞன் போலவே இருப்பார். தன்னுடைய வேலைகள் அனைத்தையும் அவரே செய்து கொள்வார்.

ஒரு நாள் கடைவீதிக்கு அவர் காய்கறிகள் வாங்குவதற்காக சென்றார்.

அவருக்கு எதிரே ஒரு இளைஞன் எங்கோ பராக்குப் பார்த்தபடி வந்தான். அவர் மீது மோதி விட்டான். அவர் அப்படியேதான் நின்றார். அவன் கீழே விழுந்து கை, கால்களில் லேசான காயம் ஏற்பட்டது.

அவனுக்குக் காயம் ஏற்பட்ட எரிச்சலில், “பார்த்து வர மாட்டாயா? இப்படி வேகமாக வந்த என்மீது மோதிய உன்னை என்ன செய்வது? ஒரு கால் இப்படி இருக்கிறதே வீட்டிலேயே இருக்க மாட்டாமல் உன்னையெல்லாம் யார் கடைவீதிக்கு வரச் சொன்னது” என்று கோபமாகக் கத்தினான்.

ஜென் குரு புன்னகைத்தபடியே அனைப் பார்த்தார்.

“மகனே எனக்குக் கால் ஊனமாக உள்ளது. அதனால் தான் நான் உன்மீது மோதிவிட்டேன். தவறு என் மீதுதான். அதற்காக நான் உன்னிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். என்னை மன்னித்து விடு.

அப்படியில்லாமல் உன் மீதுதான் தவறு என்பதை நீ உணர்ந்தால் அதையே நீனைத்த உன்னை வருத்திக் கொள்ளாதே. அது உனக்குத்தான் கெடுதல்.

உன் மனதில் வருத்தம் இருந்தால் அது உன் உடலையும் பாதிக்கும். எனவே இந்த சம்பவத்தை இப்போதே மறந்துவிடு” என்று கனிவாகக் கூறினார்.

அதைக் கேட்டுத் தன் தவறை உணர்ந்த அவன் அவரிடம் மன்னிப்பு கேட்டுவிட்டு தலைகுனிந்தபடி சென்றான்.

## ஞானிகளின் சிறப்பு – வேதாத்திரியம்

“அறிவறிந்த ஞானிகளும் அடைந்திடும்ஓர் கஷ்டமுண்டு.
அவரறிந்தோர் பூரணமாய், அவ்விதமே தகுதியுளோர்
அறிவறிந்தே அமைதிபெற அவர்விருப்பம் கொண்டுள்ளார்.
அவ்வுயர்வில் உள்ளோர்ஏன் அவ்வேகம் கொள்ளவெனில்,
அறிவடைந்த பலன்முழுதும் அனுபவித்து அறிந்துவிட
ஆங்காங்கு எண்ணிறந்தோர் ஆர்வமது கொண்டுளதால்,
அறிவின்நிலை விளக்குதற்கு அவர்கொண்ட கருணையினால்,
அல்லும் பகலும் உழைத்து அவர்கடமை செய்கின்றார்.”
(ஞாக.பா.1369)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 20.ஞானநிலைகள்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

புகழ் பெற்ற புத்த மடம் ஒன்றிற்கு அந்நாட்டு அரசர் வந்தார்.

அங்கிருந்த ஜென் துறவி அவரை வரவேற்றார்.

“குருவே! எனக்கு ஒரு சந்தேகம்” என்றான் அரசன்.

“என்ன சந்தேகம்? கேளுங்கள்” என்றார் ஜென் குரு.

“ஞானம் பெற்ற ஒருவன் இறந்த பிறகு என்ன ஆவான்?” என்று கேட்டான்.

“அரசே! எனக்கு எப்படித் தெரியும்?” என்று கேட்டார் ஜென் குரு.

“நீங்கள் ஞானம் பெற்றவர்தாமே” என்றான் அவன்.

“நான் இன்னும் சாகவில்லையே” என்றார் குரு.

## ஞானநிலைகள் – வேதாத்திரியம்

“அஞ்ஞானம் அறிவினது ஆரம்ப நிலையாகும்.
விஞ்ஞானமோ அறிவின் வேகநிலை
மெய்ஞ்ஞானம் அறிவதில் பூரணமாம்.
இஞ்ஞானம் மூன்றும் இயற்கையின் எண்ணநிலை.”
(ஞாக.பா.1043)

- ஞாலத்தின் மூலத்தினை உணர்ந்த அதன் தன்மைகளை ஆராய்ந்தறிவது ஞானத்தில் முதல்நிலை.
- அத் தன்மைகளுடைய மூலம் எவ்வாறு ஞாலமாகிறது என்னும் தன்மாற்றச் சரித்திரத்தைத் தெளிந்து உணர்வது ஞானத்தில் இரண்டாம் நிலை.
- ஞானத்தின் இரு நிலைகளையும் கடந்து. எள்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல பாவித்து

அனைத்துயிருக்கும் ஒத்தும் உதவியும் வாழ்கின்ற பக்குவத்தை பெறுதல் ஞானத்தின் மூன்றாம் நிலை.

- ஞானத்தின் மூன்றாவது நிலையில் மனித அறிவு முழுமையடைகிறது. "அறிவின் முழுமை அது முக்தி" என்பது வேதாத்திரியம்.

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 21. தொண்டில் உயர்வு தாழ்வு வேண்டாம்?

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் துறவியாக இருந்த சேசன் சிறந்த ஓவிய கலைஞராக விளங்கினார்.

அவர் வரைந்த ஓவியங்கள் அருமையாக இருந்தன. யாரையாவது அவர் வரைந்தால் அவரை நேரே பார்ப்பது போல இயல்பாக அந்த ஓவியம் இருந்தது.

ஆனால் அவரோ பணம் வாங்காமல் யாருக்கும் ஓவியம் வரைந்து தருவது இல்லை. அவர் கேட்கும் தொகையும் மிக அதிகமாக இருக்கும்.

அங்கே இருந்தவர்கள் அவரைப் பேராசை பிடித்த கலைஞன் என்றே அழைத்தார்கள்.

அதற்காக அவர் தன் இயல்பை மாற்றிக் கொள்ளவில்லை.

செல்வச் சீமாட்டி ஒருத்தி அவரிடம் "என் வீட்டிற்கு வந்து என்னை ஓவியம் வரைந்து தர வேண்டும்" என்றாள்.

"விட்டிற்கே வந்து ஓவியம் வரைந்து தருகிறேன். எவ்வளவு பணம் தருவீர்கள்?" என்று கேட்டார் அவர்.

"நீங்கள் எவ்வளவு கேட்டாலும் தருகிறேன்" என்றாள் அவள்.

அவள் வீட்டிற்குச் சென்றார் அவர். அங்கே அவள் தன் காதலனுடன் கொஞ்சிப் பேசிக் கொண்டிருந்தாள்.

“கொஞ்சிப் பேசிக் கொண்டிருக்கும் இந்த நிலையிலேயே என்னை ஓவியமாக வரையுங்கள்” என்றாள் அவள்.

அந்தக் கோலத்திலேயே அவளை ஓவியமாக வரைந்தார் அவர். அந்த ஓவியத்திற்காக அவர் கேட்ட தொகை மிக அதிகமாக இருந்தது.

தொகையைக் கேட்காமல் ஓவியம் வரைய அழைத்து விட்டோமே? இவர் கேட்ட தொகையை கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்று நினைத்தாள்.

அந்தத் தொகையைக் கொடுத்த அவள் “பேராசை பிடித்தவரே! பணத்திற்காக எதையும் செய்வீர்? என் உள்ளாடையில் ஓவியம் வரையச் சொன்னாலும் வரைந்து தருவீர்களா?” என்று கோபத்துடன் கேட்டாள்.

“அம்மணி! நான் கேட்கும் தொகையைத் தருவதாகச் சொல்லுங்கள். உங்கள் உள்ளாடையில் ஓவியம் வரைந்து தருகிறேன்” என்று அமைதியாகச் சொன்னார் அவர்.

அவள் உள்ளாடையில் ஓவியம் வரைந்து நிறைய பணம் பெற்றுக் கொண்டார்.

எல்லோரும் நினைத்தது போல அவர் பேராசை பிடித்தவர் அல்லர்.

தன் ஊர் மக்கள் வறுமையில் வாடுகிறார்கள். ஊருக்குச் செல்ல நல்ல சாலை இல்லை. ஊரில் புத்தர் கோயிலும் இல்லை.

இந்த மூன்று குறைகளைப் போக்குவதற்காக வாழ்நாளின் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். அதற்காக பணம் சேர்த்து அனுப்பிக் கொண்டிருந்தார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு அவர் எண்ணம் நிறைவேறியது.

ஓவியப் பொருள்களை எல்லாம் தூக்கி எறிந்தார். அவர் அதன் பிறகு ஓவியம் வரையவே இல்லை.

## தொண்டில் உயர்வு தாழ்வு வேண்டாம்? வேதாத்திரியம்

“அருள்துறையில் சத்சங்கம் நடை பெறுவதென்றால்,
அவரவர்கள் இயன்றவரை தொண்டாற்ற வேண்டும்.
பொருளுடையோர் பொருள் தரலாம் அவர் விரும்பும் அளவில்
பொதுச் சொத்தே, அருள்நாட்டம் கொண்டவர்க் கெல்லாம்.
அருள்மனத்தால் ஒருவர் பிறரை அடக்கிஆளும்,
ஏற்றத்தாழ் வெதுவும் சத் சங்கங்கட்கு ஒவ்வா.
உருளஉலகில் உருண்டசங்கம் ஆயிரமா யிரமாம்
உட்பகையால். உண்மைகண்டு., நல்லனவே செய்வோம்.”
(ஞாக.பா.1328)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 22. ஆசிரியர் பெருமை

### (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் குருவிடம் கல்வி கற்பதற்காக இளைஞன் ஒருவன் வந்தான்.

அவரைப் பணிவாக வணங்கிய அவன் “ஐயா! உங்களிடம் நான் எப்படிக் கல்வி கற்க வேண்டும்? சொல்லுங்கள். அப்படியே கற்றுக் கொள்கிறேன்” என்றான்.

“என்னை ஒரு மணியாக நினைத்துக் கொள்” என்றார் அவர்.

“நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே” என்றான் அவன்.

“மணியை மெல்லத் தட்டினால் மெல்லிய ஓசை கேட்கும். வலிமையாகத் தட்டினால் பேரோசை கேட்கும். தட்டாமல் இருந்தால் ஓசை எதுவும் கேட்காது. மணிக்கு எந்தப் பண்பும்

இல்லை. பயன்படுத்துபவர்க்கு ஏற்ப அது பயன் தரும்" என்றார் அவர்.

## ஆசிரியர் பெருமை – வேதாத்திரியம்

"கல்விக்கு நாயகனாய் மக்கட் பண்பைக்
காத்துயர்த்தும் செயலால் ஆசிரியர் மேலோர்.
நல்வாழ்விற்கே கல்வி நலம்கண்டு பயன்கொள்வோம்.
நாடும் வீடும் உயரும். நாம் இனிதாய் வாழ்ந்திடலாம்."
(ஞாக.பா.478)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 23. ஆற்றல்கள் வீணாகாது.

(ஜென்னும் வேதாத்திரியமும்)

அது ஒரு மிகப் பெரிய மடாலயம். ஒரு காலத்தில் அங்கு பேச்சுரிமை தடை செய்யப்பட்டிருந்தது.

தடை என்றால் உங்க வீட்டுத் தடை எங்க வீட்டுத் தடை அல்ல... மாபெரும் தடை.

யாரும் பேசக் கூடாது. பேசவே கூடாது. ஒரே ஒரு விதிவிலக்கு... பத்தாண்டுகளுக்கு ஒரு முறை புத்த பிட்சுகள் மட்டும் பேசலாம்... அதுவும் இரண்டே இரண்டு வார்த்தைகள் மட்டும்!

அந்த புத்தமடத்தில் தலைமைப் பிஷு இருந்தார்.

அவரது சீடர் ஒருவர் அந்த மடத்தில் 10 ஆண்டுகளை ஒரு வார்த்தைகூடப் பேசாமல் கழித்தார். பின்னர் தலைமைப் பிஷுவிடம் வந்தார்.

'சொல்லு... நீ பேச விரும்பும் இரு வார்த்தைகள் என்ன?'

‘படுக்கை... கடினம்’

‘ஓ... அப்படியா...’ என்று பதிலளித்தார் தலைமை குரு.

பத்தாண்டுகள் கழித்து, அந்த பிஷு திரும்பி தலைமை குருவிடம் வந்தார்.

‘ஓ அதற்குள் பத்தாண்டுகள் போய்விட்டதா...’ கேட்டார் தலைமை குரு.

‘சரி... இந்த முறை நீ பேச விரும்பும் இரு வார்த்தைகள் என்ன?’

‘சாப்பாடு... நாத்தம்..’

‘ஓ... அப்படியா’ என்று கேட்டுக் கொண்டார் தலைமை குரு.

மேலும் பத்தாண்டுகள் கழிந்தன. பிஷு வந்தார்.

தலைமை பிஷு, “ம்.. பத்துவருடங்கள் ஓடிவிட்டன... இப்போது நீ பேச விரும்பும் இரு வார்த்தைகள் என்ன?’ என்றார்.

‘நான்... போகிறேன்’

‘நல்லது...’ என்றார் குரு.

பின்னர், ‘கண்ணா... இது நான் எதிர்ப்பார்த்த ஒண்ணுதான்...’, என்ற தலைமை குரு, ‘இந்த முப்பது வருடங்களும் நீ ஒன்றை மட்டும்தான் சொல்லிக் கொண்டிருந்தாய்... அது புகார்.. கிளம்பு!’ என்றார்.

## உடல், அறிவு, ஆற்றல்கள் வீணாகாது – வேதாத்திரியம்

“தீட்டு ஒட்டும் தொட்டு விட்டால் என்று எண்ணும்

தெளிவற்ற, மனமயக்கம் அன்று ஏது?
ஏட்டுப் படிப்பிற்காக ஒருவர் வாழ்வில்
இருபது ஆண்டுகள் வீணில் ஏன் கழிப்பார்?
கோட்டு, தொப்பி, பூட்ஸ்களைச் சுமந்துகொண்டு
குமாஸ்தாவாய் வேலைசெய்து காலம் போக்கும்
நாட்டுக்கு இழப்பு அளிக்கும் தொழில்கள் ஏது?
நல்லுள்ளத்தில் அடிமை என்ற விலங்கு ஏது?
(உலகசமாதானம் பா.182)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 24. கூடி வாழும் பண்பு?

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு புத்த மடாலயத் தலைவர் மிகவும் கவலையில் இருந்தார். ஒரு காலத்தில் அவரது மடாலயம் அந்தப் பகுதியிலேயே சிறப்பும் மதிப்பும் பெற்று விளங்கிய ஆலயம்.

தற்போது மதிப்புக் குறைந்து பாதாளத்திற்குப் போய்க் கொண்டிருந்தது அவருக்குத் தெளிவாக விளங்கியது.

மடத்தின் உள்ளேயே பிக்ஷுக்கள் யாரும் ஒருவரை ஒருவர் மதிக்காமல் தன்னிச்சையாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

பொறுக்க இயலாமல் ஒரு நாள் நம் தலைவர் தன்னை விட அனுபவத்தில் சிறந்த ஒரு குருவைத் தேடிப் போனார். தன் பிரச்சினையை எடுத்துச் சொன்னார்.

அந்தக் குருவும் சற்று நேரம் ஆழ்ந்து யோசித்து விட்டு பிறகு “உங்கள் மடத்தில் புத்தரே வந்து தங்கியிருக்கிறார். நீங்கள் எவரும்

அவரைக் கண்டு கொள்ளவும் இல்லை. மதிக்கவும் இல்லை. பின் எப்படி சிறப்பு செழிக்கும்?" என்று கேட்டார்.

இதைக் கேட்ட நம் தலைவர் வியப்பு மாறாமலே மடத்திற்குத் திரும்ப வந்து அங்கே இருந்த புத்த பிக்ஷுக்களுக்கு விபரம் சொன்னார்.

அவர்களுக்கும் ஆச்சரியம். அந்தக் கணத்தில் இருந்து சுற்றியிருப்பவர்களில் ஒருவர் கடவுளாக இருக்கக் கூடும் என்ற அனுமானத்தில் எல்லோரையும் பணிவாகவும், அன்பாகவும், மிகுந்த மரியாதையுடனும் ஒவ்வொருவரும் அணுகினார்கள்.

நாளடைவில் மடத்தின் சிறப்பு பல மடங்கு உயர்ந்து போனது என்பதைச் சொல்லத் தேவையே இல்லை! கூடிச் செயல் படும் போது கொடுத்துப் பெறுதல் அவசியமான ஒரு சூட்சுமம் ஆகும்.

### கூடி வாழும் பண்பு வளரும் – வேதாத்திரியம்

"தனிமனிதன் அறிவு உடல் ஆற்றல் கொண்டு
    சமூகத்திற் கெந்தவகைத் துன்பமேனும்
இனி உலக ஆட்சியின்கீழ் எவரும் செய்யார்
    இயற்கை எனும் ஒரு மூல தத்துவந்தான்
மனிதஇனம் ஈறாக அனைத்துமாகி
    மதிக்கும் ரசிக்கும் அளவில் அறிவாயுள்ள
புனிதநிலையை அறிந்து கூட்டுவாழ்வின்
    பொறுப்புணர்ந்து செயலாற்றும் பண்பு ஓங்கும்."
(உலகசமாதானம் பா.188)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 25.கோபத்தில் சத்தம் ஏன்?

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு ஜென்துறவி நதியில் குளித்துவிட்டுக் கரையேறும் சமயம், அவ்விடத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், சத்தம் போட்டு ஒருவரை ஒருவர் திட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதைப் பார்த்த துறவி, தன் சீடர்களிடம் திரும்பி சிரித்துக் கொண்டே கேட்கிறார்?

ஏன் மனிதர்கள் கோபத்தில் இருக்கும்போது ஒருவரை ஒருவர் பார்த்து சத்தம் போட்டு சண்டை பிடிக்கிறார்கள்?

சீடர்கள் சில நிமிடங்கள் சிந்திக்கிறார்கள்.....பின்னர்..
சீடர்களில் ஒருவர்:- கோபத்தில் நாம் அமைதியை இழக்கிறோம்! அதனால் சத்தமிடுகிறோம்!

துறவி:- ஆனால், உனக்கு மிக சமீபத்தில் இருக்கும் நபரிடம், ஏன் சத்தமிடுகிறாய்? அவர்கள் உன்னருகில்தானே நிற்கிறார்கள்! நீ சொல்ல வேண்டியதை அவர்களுக்கு மட்டும் கேட்கும் விதமாக எடுத்துரைக்கலாமே!

ஒவ்வொரு சீடரும் ஒரு காரணம் சொல்கிறார்...... ஆனால் எந்த காரணத்திலும் அடுத்தவர்களுக்கு உடன்பாடில்லை! கடைசியாக துறவி பதில் கூறுகிறார்.....

எப்பொழுது இரு மனிதர்கள், ஒருவர் மீது ஒருவர் கோபம் கொள்கிறார்களோ, அப்பொழுது அவர்களின் மனது இரண்டும் வெகு தொலைவுக்குச் சென்று விடுகிறது!

எனவே தூரத்தில் இருக்கும் மனதுக்கு கேட்க வேண்டும் என்பதற்காகவே, சத்தமிடுகிறார்கள்!

மனது எவ்வளவு தூரம் விலகி இருக்கிறதோ, அவ்வளவு தூரம் இவர்கள் தங்கள் ஆற்றலை உபயோகித்து சத்தம்போட வேண்டியிருக்கும்!

அப்பொழுது தானே தங்கள் கருத்து வெகு தொலைவில் இருக்கும் மனதைச் சென்றடையும்!

ஆனால் இதுவே, இரு மனிதர்கள் ஒருவர் மீது ஒருவர் அன்பாக இருக்கும்போது என்ன நடக்கிறது?

அவர்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் சத்தமிடுவதில்லை! அமைதியாகவும், அன்பான முறையிலும் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்துவார்கள்!

காரணம் அவர்களின் மனது இரண்டும் வெகு சமீபத்திலே இருக்கும்! மனதிற்கு இடையேயான தூரம், மிகக் குறைவாக இருக்கும் அல்லது மனதிரண்டும் ஒன்றோடு ஒன்று இணைந்தே!

துறவி தொடர்ந்து கூறுகிறார் ..... இதைவிடவும் அதிகமாக ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தும்போது என்ன நடக்கும்?

அவர்கள் ஒருவருக்கொருவர் சத்தமாக பேச தேவையிருக்காது! அவர்களின் மனதுகள் இரண்டும் கிசுகிசுப்பாக பேசுவதில் இருந்தே, அவர்களின் கருத்துகள் பரிமாறப்படும்!

இன்னும் இன்னும் அன்பு அதிகமாகும்போது வார்த்தையே தேவைப்படாது!

அவர்கள் கண்கள் ஒருவரை ஒருவர் பார்க்கும்போதே, மனதின் எண்ணங்கள் வெளிப்பட்டுவிடும்!

துறவி கடைசியாக சீடர்களைப் பார்த்து கூறுகிறார்........ அதனால் நீங்கள் ஒருவருடன் ஒருவர் வாதிடும்போது, “உங்கள் மனதுகள் இரண்டும் தொலைவாகப் போய்விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்! மனதின் தொலைவை அதிகப்படுத்தும் வார்த்தைகளை உபயோகப்படுத்தாதீர்கள்!”

அப்படி செய்யாமல் போனால், ""ஒருநாள் உங்கள் மனங்களிரண்டின் தூரம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாகி, கடைசியில் ஒன்றுசேரும் பாதையே அடைக்கப்பட்டுவிடும் நிலை வந்துவிடும்.

குடும்ப வாழ்க்கைச் சிறப்பாக அமைய வேண்டும் என்றால்,
அதற்கு என்ன வழி? வேதாத்திரியம்.

மூன்று பண்புகள்:

1. விட்டுக் கொடுப்பது,
2. அனுசரித்துப் போவது,
3. பொறுத்துப் போவது.

இவை மூன்றும் இல்லை என்றால் இல்லறம் இன்பமாக இருக்காது. வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 26.அன்பு வழியில்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு ஜென் துறவியைக் காண ஒருவர் அவரது மடாலயத்திற்குச் சென்றார்.

அப்போது குரு அவரிடம், "ஏற்கனவே நாம் சந்தித்திருப்பது போல் இருக்கிறது. சந்தித்துள்ளோமா?" என்று கேட்டார்.

அதற்கு அவர் "ஆம், சந்தித்துள்ளோம்" என்று கூறினார்.

"அப்படியா?" என்று சொன்னபடியே, அவரிடம் "டீ சாப்பிட போலாமா?" என்று குரு கேட்டார்.

பின்னர் மற்றொருவரும் குருவைப் பார்க்க வந்தார்.

அவரிடமும் குரு “ஏற்கனவே நாம் சந்தித்திருப்பது போல் இருக்கிறது. சந்தித்துள்ளோமா?” என்று கேட்டார்.

அதற்கு அவர் “இல்லை” என்று கூறினார்.

“அப்படியா?” என்று சொன்னப்படியே, அவரையும் குரு “டீ சாப்பிட போலாமா?” என்று கேட்டார்.

இக் கதையிலிருந்து, எப்போதும் அனைவரையும் ஒரே மாதிரி தான் நடத்த வேண்டும் என்பது புரிகிறது.

**அன்பு வழி – உலக சமாதானத்தில் வேதாத்திரியம்**

அறிவினது இயல்பறிந்த அறிஞரான
  அன்பர்களே. மனது எனும் தத்துவத்தை
அறிந்தனைப் பண்படுத்த எண்ணி எண்ணி
  அனுபவத்தால் பல முறைகள் கண்டுவிட்டேர்.
அறிவினது உயர்வினிலே மனிதர் வாழ
  அகில உலகோர் ஆட்சி வகுத்துத் தந்தேன்.
அறிஞரெலாம்ஆராய்வீர். மனிதர் வாழ்வை
  அன்பு வழியில் திருப்ப முயற்சி செய்வீர்”(உலகசமாதானம்பா.144)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 27.அன்பின் செயல்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு அழகிய மலையையின் அடிவாரத்தில் இருந்த சிறிய குடிசையில் ஜென் துறவி ரியோகன் எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்தார்.

ஒரு நாள் இரவு திருடன் ஒருவன் குடிசையில நுழைந்து ஏதேனும் கிடைக்குமா என்று தேடி ஒன்றும் கிடைக்காமல் ஏமாந்தான்.

அந்த நேரத்தில் உள்ளே நுழைந்த ஜென் துறவி திருடனைப் பார்த்து "இவ்வளவு தூரம் என்னைப் பார்ப்பதற்காக வந்த நீ ஏமாந்து வெறுங்கையுடன் திரும்பக் கூடாது. என்னுடைய உடைகளை எடுத்துச் செல்!" என்று கூறினார்.

ஆச்சரியமும், குழப்பமும் அடைந்த திருடன் உடைகளை எடுத்துக் கொண்டு அங்கிருந்து விரைவாக நழுவினான்.

உடைகள் அற்ற துறவி நிர்வாணமாய் உட்கார்ந்து தொலைவில் தெரிந்த அழகிய நிலவினைப் பார்த்து இரசித்தார்.

பின்பு "முட்டாள் நான்! இந்த அழகிய நிலவை திருடனிடம் கொடுத்து இருக்கலாம்" என்று எண்ணினார்.

## அன்பின் செயல் – வேதாத்திரியம்

"அனைத்துயிரும் ஒன்றென்று
அறிந்த அடிப்படையில்
ஆற்றும் கடமையெல்லாம்
அன்பின் செயலாகும்." (ஞாக.பா.585)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 28.உழைத்தால் சாப்பிடு

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஹ்யகுஜோ என்பவர் ஒரு ஜென் மாஸ்டர். அவர் எண்பது வயதிலும் கஷ்டப்பட்டு உழைத்து வாழ்வதை கொள்கையாக கொண்டு வாழ்ந்து வந்தார்.

மேலும் அவர் தான் முதுமை அடைந்ததையும் பொருட்படுத்தாமல், அவர் தங்கியிருந்த இடத்தில் உள்ள தோட்டத்தை சீரமைப்பது, மரங்களுக்கு நீர் ஊற்றுவது, களை அறுப்பது போன்ற வேலைகளை செய்து வந்தார்.

அதைக் கண்ட ஹ்யகுஜோவின் சீடர்கள், இந்த வயதிலும் தங்கள் குரு வேலை செய்வதைக் கண்டு வருத்தப்பட்டனர்.

அதை அவர்கள் தங்கள் குருவிடம் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேட்கவில்லை. எனவே சீடர்கள் இதற்கு ஒரு முற்று புள்ளி வைக்க முடிவு செய்தனர்.

அதனால் அந்த சீடர்கள் குரு வேலை செய்யப் பயன்படுத்தும் கருவிகளான மம்முட்டி, கடப்பாறை போன்றவைகளை, குருவின் கண்களுக்குப் புலப்படாதவாறு மறைத்து வைத்தனர்.

ஆனால், குருவோ! வேலை செய்யாத காரணத்தினால், அன்று முழுவதும் சாப்பிடாமல் இருந்தார். சீடர்களும் இதை கவனித்து வந்தனர்.

பின் மறுநாளும் குரு சாப்பிடாமல் வெறுமையாக அமர்ந்திருந்தார். இதைக் கண்ட சீடர்கள் வேறு வழியின்றி அந்த பொருட்களை குருவிடமே ஒப்படைக்க முடிவெடுத்து குருவின் கண்களுக்குப் தென்படும்படியாக அப்பொருட்களை வைத்தனர்.

குரு தான் வேலை செய்ய பயன்படுத்தும் பொருட்கள் தென்பட்டதும், அவருடைய வேலையை மீண்டும் தொடர்ந்தார். அன்று வேலை செய்ததால் அவர் உணவு அருந்தினார்.

இதைப் பற்றி சீடர்கள் குருவிடம் கேட்கும் போது, “உழைக்காமல் உண்ணும் உணவு உடம்பில் சேராது” என்று கூறினார்.

பின் சீடர்களிடம் “நீங்கள் வேலை செய்யாவிடில் உணவு இல்லை” என்று சொல்லி உள்ளே சென்று விட்டார்.

## உழைப்பின் மேன்மை – வேதாத்திரியம்.

“உழைப்பினால் உடலும் உள்ளமும்
உலகமும் பயன்பெறும் உணர்வீர்!” (ஞாக.பா.809)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 29. ஜென் குருவும் ஒன்பது திருடர்களும்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜப்பானில் ஒரு சிறு கிராமம் அது. அங்கு வசித்து வந்த மக்களுக்கு பெரும் தொல்லையாய் இருந்தார்கள் ஒன்பது திருடர்கள்

இவர்களை அடக்கி, தங்களைக் காக்க பக்கத்து நகரில் வாள் வீச்சில் புகழ் பெற்றிருந்த ஜென் குரு ஒருவரை அழைத்து வந்தனர்.

கிராமதிற்கு வந்த குரு அங்கிருந்த உணவகம் ஒன்றிற்கு சென்று சாப்பிடுவதற்காக ஒரு கிண்ணத்தில் அரிசி சாதம் எடுத்து வரச் சொன்னார்.

தன்னுடைய இருக்கையில் அமர்ந்தவர் இடையிலிருந்த வாளை உருவி தனக்கு எதிரில் வைத்து விட்டு, கிண்ணத்தில் வந்த சோற்றினை வெட்டுக் குச்சியால் (சாப்ஸ்டிக்) சாப்பிட ஆரம்பித்தார்.

விஷயம் அறிந்த ஒன்பது திருடர்களும் ஜென் ஆசிரியர் சாப்பிடும் உணவகத்திற்கு வந்து யாருக்கும் தெரியாமல் பின்புறம் மறைந்திருந்து நோட்டமிட்டனர். குருவுக்கு அது தெரிந்து விட்டது.

அப்போது அவர் தலைக்கு மேல் ஈக்கள் பறந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு முறையும் ஜென் குரு தன்னுடைய சாஸ்டிக்கினை உயர்த்தி மேலே பறந்து கொண்டிருந்த ஈயினை அடித்தார்.

பார்க்காமலே, ஒவ்வொரு முறையும் ஒரு ஈ செத்து விழுந்தது. ஒரு முறை கூட குறி தவறவே இல்லை.

ஒன்பது முறை, ஒன்பது ஈக்களை மிகத் துல்லியமாக அடித்துக் கொன்றார். பின்பு திரும்பிப் பார்த்தார்.

மறைந்திருந்த கொள்ளைக் கூட்டத் திருடர்கள் காணாமல் போயிருந்தனர்.

அன்றைக்குச் சென்றவர்கள்தான் அதன் பிறகு அந்தக் கிராமத்தின் பக்கமே அவர்களை யாரும் பார்க்கவில்லை.

## ஓர்மை நிலைப் பயிற்சி – வேதாத்திரியம்.

“நினைப்பு மறப்பும் அற்ற இருக்க நீ பழகிக்கொள், புலன்கள்
அனைத்தும் அடிமையாம். அமைதி கிட்டிடும் ஆங்கே.
ஒன்றையும் நினையாது, உன்னையும் மறவாது,
நின்ற நிலையே அது. நீயறி. நினைவை நிறுத்தி.” (ஞாக.பா.1486

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 30. வைர சூத்திரம்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு புத்த துறவி வைர சூத்திரம் என்ற அரிய விலை மதிப்பில்லாத புத்தகத்தை எங்குச் சென்றாலும் எடுத்துச் செல்வார்.

அவர் இருந்த ஊரில் அவரிடம் மட்டுமே அந்த புத்தகம் இருந்தது..

அதனால், அந்தப் புத்தகத்திலிருந்து அவர் கூறும் கருத்துகளை மற்ற துறவிகள் மட்டும் அல்லாது அறிஞர்களும் மற்ற சாதாரணமான மக்களும் கேட்டு அறிந்தனர்.

ஒரு நாள் அந்த புத்த துறவி பக்கத்து ஊருக்கு ஒரு மலையின் வழியாக ஏறிச் சென்று கொண்டிருந்தார்.

மிகுந்த பசி களைப்பினால் அங்கு சிற்றுண்டி விற்றுக் கொண்டிருந்த பாட்டியிடம், "அம்மா!, என்னிடம் பணம் இல்லை. ஆனால், சிறந்த களஞ்சியமான வைரசூத்திரம் உள்ளது. நீங்கள் எனக்குப் பசியாற சிற்றுண்டி அளித்தால், அதிலிருந்து சிறந்த கருத்துக்களை எடுத்துக் கூறுகிறேன்" என்றார்.

அதற்கு வைரசூத்திரம் பற்றி கேட்டு அறிந்திருந்த அவள், "நான் கேட்கும் எளிய கேள்விக்கு விடை அளித்தால், உங்களுக்கு சுடச்சுட பருக தேநீரும், சாப்பிட உணவும் தருகிறேன்" என்றாள். அவரும் சரியென்று சொன்னார்.

"நீங்கள் நான் கொடுக்கும் உணவை, "இறந்த கால மன நிலையுடன் சாப்பிடுவீர்களா? நிகழ்கால மனநிலையுடன் சாப்பிடுவீர்களா? அல்லது எதிர்கால மனநிலையடன் சாப்பிடுவீர்களா?" எனக் கேட்டாள்.

பதில் தெரியாத துறவியும், வைர சூத்திரத்தை எடுத்துப் பிரித்து அலசி ஆராய்ந்து பதில் தேடிக் கொணடிருந்தார்.

ஏடுகளின் மூலம் எழும் ஞான ஆர்வம் – வேதாத்திரியம்

"ஏட்டினிலே கதைத்துவிட்ட ஞானம் கற்று,
ஏக்கமுற்று, இதையடைய எண்ணம் கொண்டு,
போட்ட இடந்தனில் பொருளைத் தேடிக் காணும்
பொதுஅறிவைக் கூட உபயோ கிக்காமல்,
நாட்டிலுள்ள அனுபோகப் பொருட்கள்மீது
நாடிநிற்கும் அறிவைப் பண்படுத்த வேண்டி,
காட்டிற்குப்போய்க் கிழங்கும் கனியும் உண்டு.
காலத்தைக் கழிப்பதனால் பயன்தான் என்ன?" (ஞாக.பா.1439)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 31.பசியும் தாகமும் தந்தது யார்?

### (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஞானி ஜுன்னாயிது தனது சீடர்களுடன் நடந்து சென்று கொண்டிருந்தார்.

வழியில் எந்த கிராமமும் தென்படவில்லை கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வெட்ட வெளிதான்.

தலைக்கு மேலே வெயில் சுட்டெரித்தது. எங்காவது சென்று இளைப்பாரலாம் என்றால் மரம் செடி, கொடிகள் எதையுமே அந்த வெளியில் காண முடியவில்லை.

தாகம் அவர்களுடைய தொண்டையை வறட்டியது. பசியோ அவர்களை தள்ளாட வைத்தது. மயக்கம் போட்டு விழாத குறையாக அவர்கள் மெதுவாக நடந்து கொண்டிருந்தனர்.

குடிக்க தண்ணீரும் கிடைக்காமல் உண்ண உணவும் கிடைக்காமல் வீடுகளற்ற குட்டி பாலைவனம் போன்ற பகுதியில் நாள் முழுவதும் அவர்கள் பயணம் செய்தனர்.

மெல்ல இருட்டத் தொடங்கியிருந்தது. வழியில் ஒரு விசாலமான மரம் தென்பட்டது. சீடர்களின் மனநிலை அறிந்த குரு அவர்களை இளைப்பாறச் சொன்னார். உடனே சீடர்கள் அடித்துப் போட்டது போல் சுருண்டு படுத்தனர்.

எப்போதும் உறங்குவதற்கு முன்பாக பிரார்த்தனை செய்வது குரு ஜுன்னாசியின் வழக்கம்.

அன்றைய நல்ல செயல்களுக்கு நன்மையும், கெட்ட செய்திகளுக்கு மன்னிப்பும் வேண்டுவது அந்த பிரார்த்தனையின் போது நடைபெறும்.

அன்றும் வழக்கம் போல மண்டியிட்டு பிரார்த்தனை செய்த குரு, " இறைவா, இன்று தாங்கள் அளித்த அனைத்திற்கும் மனப்பூர்வமான நன்றி என்றார்.

இதனைக் கேட்டதும் அருகில் படுத்திருந்த ஒரு சீடன், குருவே இறைவன் இன்று நமக்கு ஒன்றும் தரவில்லையே? என்றான் கவலையுடன்.

யாரப்பா சொன்னது? என்றார் குரு புன்னகையுடன்?.

இறைவன் இன்று நமக்கு அருமையான பசியை அளித்தார். தாகத்தை உணர வைத்தார் அதற்காகத்தான் நான் அவருக்கு நன்றி செலுத்துகிறேன் என்று கூறினார்.

"தப்புக் கணக்கிட்டுத் தான் ஒன்றை எதிர்ப்பார்த்தால்,
ஒப்புமோ இயற்கை விதி? ஒழுங்கமைப்பிற் கொத்தபடி
அப்போதைக் கப்போது அளிக்கும் சரிவிளைவு.
எப்போதும் கவலையுற்று இடர்படுவர், இதை உணரார்."(ஞாக.பா.1369)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

## 32.பழுத்த ஞானம்

### (ஜென்னும் வேதாத்திரியமும்)

டோசூய் அவர் காலத்தில் வாழ்ந்த சிறந்த ஜென் ஆசிரியர்.

அவர் பல இடங்களுக்கு சென்று, சில மடங்களில் தங்கியிருந்தும் ஜென் புத்த மத்ததினைப் பற்றியும், தியானம் பற்றியும் போதித்து வந்தார்.

கடைசியாக இருந்த மடத்தில் புத்த பிட்சுவாக மாறுவதற்கும், ஜென் பற்றி படிப்பதற்கும் பல சீடர்கள் இருந்தனர்.

ஒருநாள் அவர்கள் எல்லோரையும் அழைத்து தான் கற்றுக் கொடுப்பதிலிருந்து விலகுவதாகவும், அனைவரும் இங்கிருந்து கலைந்து வேற எங்காவது அவரவர் விருப்பப்படி செல்லலாம் என்று கூறி விட்டு கிளம்பினார்.

அன்றிலிருந்து எவராலும் டோசூய் எங்கு இருக்கிறார் என்று கண்டு பிடிக்க முடியவில்லை.

மூன்று வருடங்களுக்குப் பிறகு சீடன் ஒருவன் ஜப்பானின் பழைய தலைநகரம் கியோடோ வழியாக சென்று கொண்டிருந்த போது ஒரு பாலத்தில் அடியில் தங்கி இருந்த பிச்சைக் காரர்களில் ஒருவராக இருந்த டோசூவைப் பார்த்தான்.

டோசூயிடம் சென்று தனக்கு ஜென் பற்றி கற்றுக் கொடுக்க வேண்டும் என்று நச்சரித்தான்.

"நான் இருப்பது போல, நீ சில நாட்களாவது இங்கு இருக்க முடிந்தால் நான் கற்றுக் கொடுக்கிறேன்" என்றார் டோசூய்.

முன்னாள் சீடன் இன்னாள் பிச்சைக்காரனான டோசூனைப் போல தானும் கிழிந்த உடைகளை உடுத்திக் கொண்டு அவருடன் ஒரு நாள் கழித்தான்.

அடுத்த நாள் பிச்சைக்காரர்களில் ஒருவன் இறந்தான். டோசூயும் சீடனும் பிணத்தை நடு இரவில் எடுத்துச் சென்று, மலையின் ஓதுக்குப் புறமான பகுதியில் குழி தோண்டி புதைத்தனர்.

திரும்பி பாலத்திற்கு அடியில் வந்த டோசூய் நன்றாக அடித்துப் போட்டவர் போல தூங்கினார். ஆனால், சீடனால் ஒரு நிமிடம் கூட அந்த இடத்தில் தூங்க முடியவில்லை.

காலை விடிந்ததும் டோசூய் "இன்று நாம் பிச்சை எடுக்கத் தேவையில்லை. இறந்த நண்பன் கொஞ்சம் அங்கே விட்டு சென்றிருக்கிறான்" என்று கூறிவிட்டு, சீடனிடம் கொஞ்சம் கொடுத்து விட்டு மீதியைச் சாப்பிட்டு முடித்தார்.

சீடனால் ஒரு உருண்டை என்ன, ஒரு பருக்கை கூட சாப்பிட பிடிக்கவில்லை.

"நான் முன்பே சொன்னேன். உன்னால் முடியாது" என்ற டோசூய், "இங்கிருந்து கிளம்பு, என்னை மறுபடியும் தொந்தரவு செய்யாதே" என்று சொல்லி அவனை விரட்டி அடித்தார்.

### பழுத்த ஞானம் – வேதாத்திரியம்

"திறந்துகொள்! தான் தனது என்று சொல்லும்
சிற்றறையை! வெளியே வா! அகன்று நோக்கி
பறந்துலவு! உலக சமுதாயத்தின் பரப்பகத்தில்
பற்றுஅறும். கடமையினால். பழுக்கும் ஞானம்!" (ஞாக.பா.1367)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 33.வாழ்நாள் எவ்வளவு தேவை?
## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஞானம் பெற்ற ஜென் துறவி ஒருவர் இருந்தார். ஞானம் பெறுவதற்காக அவரிடம் பல சீடர்கள் பயிற்சி பெற்று வந்தார்கள்.

அவர் முன் தோன்றிய தேவதை ஒன்று "கடவுள் என்னை அனுப்பினார். உங்களுக்கு எவ்வளவு வாழ்நாள் தேவை என்று

கேட்டு வரச்சொன்னார். நீங்கள் வீரும்பினால் ஆயிரம் ஆண்டுகள் வாழலாம்” என்றது.

அதற்கு அவர் “மற்ற மனிதர்களுக்கு எவ்வளவு வாழ்நாள் உள்ளதோ அதே போல நான் வாழ்ந்தால் போதும். கூடுதல் வாழ்நாள் வேண்டாம்” என்றார்.

தேவதை அங்கிருந்து மறைந்தது.

இதை அறிந்த சீடர்கள் கிடைத்த நல்வாய்ப்பை நம் குரு வீணாக்கி விட்டாரே என்று வருந்தினார்கள்.

அவர்களில் ஒருவர் “குருவே! நீங்கள் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தால் உங்களால் எத்தனை பேர் பயன் பெறுவார்கள்? எத்தனை பேர் ஞானம் பெறுவார்கள்? கிடைத்த நீண்ட வாழ்நாளை ஏன் வேண்டாம் என்று சொன்னீர்கள்?” என்று கேட்டார்.

“நான் நீண்ட காலம் வாழ்ந்தால் இங்கே வரும் எல்லோரும் தங்கள் வாழ்நாளை நீடித்துக் கொள்ள விரும்புவார்கள். அதற்கான வழியைத்தான் கேட்பார்கள். யாரும் ஞானம் பெற விரும்ப மாட்டார்கள்” என்று பதில் சொன்னார் அவர்.

“விந்துவின் மூலம்தான் பிறவித் தொடர். இந்தத் தத்துவத்தை உணர்ந்தவரே தனையறிய வல்லவர்கள்.” (ஞாக.பா.1301)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 34. தேர் உள்ளதா?

(ஜென்னும் வேதாத்திரியமும்)

புத்த துறவி நாகசேன் அவர்களின் மடத்திற்கு அந்நாட்டு அரசன் வந்தான்.

துறவியை வணங்கிய அவன் “நான் என்பது என்ன? விளக்கமாகச் சொல்லுங்கள்” என்று கேட்டான்.

அதற்கு நேரடியாகப் பதில் சொல்லாத அவர் “அரசே! நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்?” என்று கேட்டார்.

தேரில் வந்தேன். தேர் வெளியே நிற்கிறது” என்றான் அவன்.

“அரசே! தேர் எப்படி இருக்கும்? விளக்கமாகச் சொல்லுங்கள்.”

“தேருக்கு இரண்டு சக்கரங்கள் உள்ளன. சக்கரங்கள் சுழலக் கடையாணிகள் உள்ளன. அமர்வதற்குப் பீடம் உள்ளது. கொடி மரம் உள்ளது. தேரை இழுத்துச் செல்லக் குதிரைரைகள் உள்ளன.”

“அரசே! நீங்கள் சொன்ன பொருள்கள் அனைத்தும் ஒரே பொருளா? தனித்தனிப் பொருள்களா?”

“அவை தனித்தனிப் பொருள்கள்தாம்.”

“அரசே! நீங்கள் சக்கரங்கள் உள்ளன. கடையாணிகள் உள்ளன. பீடம் உள்ளது. கொடி மரம் உள்ளது. குதிரைகள் உள்ளன என்கிறீர்கள். அப்படியானால் தேர் எங்கே உள்ளது?” என்று கேட்டார்.

என்ன பதில் சொல்வது என்று அறியாமல் திகைத்தான் அரசன்.

“அரசே! உங்கள் தேரைப் போன்றதுதான் “நான்” என்ற உணர்வும். அதை உணர முடியுமே தவிர விளக்கிச் சொல்ல முடியாது” என்றார் அவர்.

## பிரம்மமே அறிவு, அதுவே “நான்” – வேதாத்திரியம்

““நான்யார்?” யார் என்றறியும் பேரார்வத் தாலே,
நாட்கள் மாதம்ஆண்டு பலப்பல கழித்தேன்,
ஊன்உருவில் உள்ளியங்கும் சூக்குமத்தை, உயிராய்
உணர்ந்த பின்னர், உயிர்ச்சுழலின் அலைகாந்தம் கண்டேன்!
வான்பொருளாம் காந்தமது பஞ்சதன் மாத்திரையாய்
வாழும் உயிரில் மனமுமாய் இயங்கக் கண்டேன்!
மேன்மையான இவ் வரிசைகளின் காந்தஆற்ற லுக்குள்,
மிகச்சிறந்த இறைநிலையும் அறிவும் ஒன்றாய்க் கண்டேன்”
(ஞாக.பா.1726)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.


## 35. உண்மையைக் காணப் பல வழிகள் (ஜென்னும் வேதாத்திரியமும்)

இளவரசன் சித்தார்த்ததன் அரண்மனையில் தங்கி இருந்தான். அந்த அரண்மனை ஏழு மாடிகளைக் கொண்டிருந்தது.

இளவரசனைத் தேடி நண்பன் ஒருவன் வந்தான்.

இளவரசனின் தாயாரிடம் “சித்தார்த்தன் எங்கே?” என்று கேட்டான்.

“மேலே இருக்கிறான்” என்று பதில் வந்தது.




ஒவ்வொரு மாடியாக ஏறிய அவன் ஏழாவது மாடியை அடைந்தான். அங்கே இளவரசனின் தந்தை இருந்தார்.

அவரிடம் “சித்தார்த்தன் எங்கே?” என்று கேட்டான்.

“கீழே இருக்கிறான்” என்றார் அவர்.

கீழே இறங்கிய அவன் நான்காவது மாடியில் சித்தர்த்தனைப் பார்த்தான்.

“நண்பா! உன் தாயார் நீ மேலே இருக்கிறயாய் என்றார். உன் தந்தை கீழே இருக்கிறாய் என்றார். இருவர் சொன்னதும் உண்மையாக உள்ளதே. எப்படி?” என்று கேட்டான்.

அதற்கு சித்தார்த்தன் “வெளியே மா மரத்தில் அமர்ந்து உள்ளதே காக்கை. அதன் நிறம் என்ன?” என்று கேட்டான்.

“இது என்ன கேள்வி? குழந்தையைக் கேட்டாலும் சொல்லுமே, கருப்பு” என்றான் அவன்.

“அதன் நிறம் சிவப்பு என்றாலே வெள்ளை என்றாலோ ஒப்புக் கொள்வாயா?”

“யார் ஒப்புக் கொள்வார்கள்?” என்று பதில் கேள்வி கேட்டான் அவன்.

“அந்தக் காக்கையின் குருதி செந்நிறம்தானே. அதன் எலும்புகள் வெண்மைதானே. குருதியும் எலும்புகளும் இல்லாமலா அந்தக் காக்கை உள்ளது? உண்மையைக் காணப் பல வழிகள் உள்ளன.

அவரவர் வழியில் இருந்துதான் உண்மையைக் காண வேண்டும். பொதுவான நிலையில் இருந்து அல்ல” என்று விளக்கம் தந்தான் சித்தார்த்தன்.

## உண்மை இன்பம் - வேதாத்திரியம்

“பொங்குக பொங்குக பூரித்த உள்ள மெலாம்!
எங்கும் நிறைந்தநம் ஏகாந்த நிலையறிந்து.” (ஞாக.பா.758)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 36.மகிழ்ச்சியின் இரகசியம்
### (ஜென்னும் வேதாத்திரியமும்)

அரண்மனை போன்ற பெரிய மாளிகையில் ஜென் ஞானி ஒருவர் தங்கி இருந்தார். அவரிடம் அறிவுரை கேட்பதற்காக நாள்தோறும் நிறைய பேர் வருவார்கள்.

அன்றும் நிறைய பேர் வந்திருந்தார்கள். அவர்களில் இளைஞன் ஒருவனும் இருந்தான்.

ஞானியை வணங்கிய அவன் "மகிழ்ச்சியின் இரகசியத்தை எனக்குச் சொல்லித் தர வேண்டும்" என்றான்.

சிறிய கிண்ணம் ஒன்றை எடுத்தார் அவர். அதில் வழிய வழிய எண்ணெய் ஊற்றி அவனிடம் தந்தார்.

"இந்தக் கிண்ணத்துடன் நீ மாளிகை முழுவதையும் சுற்றிவிட்டு வா. ஒரு சொட்டு எண்ணெயும் சிந்தக் கூடாது" என்றார்.

எண்ணெய்க் கிண்ணத்தைக் கையில் பிடித்தபடி கவனமாகச் சென்றான் அவன். மாளிகை முழுவதையும் சுற்றிவிட்டு அவரிடம் திரும்பினான்.

"மாளிகை முழுவதையும் பார்த்து விட்டேன். ஒரு சொட்டு எண்ணெ யும் சிந்த வில்லை" என்றான் அவன்.

"கலைக்கூடத்தில் தொங்கும் அழகிய பாரசீக விளக்குகளைப் பார்த்தாயா? அவை எப்படி இருந்தன?" என்று கேட்டார் அவர்.

“விளக்குகளைப் பார்த்தேன். அவற்றை நன்றாகக் கவனிக்கவில்லை” என்றான் அவன்.

“அந்தக் கூடத்தில் நிறைய ஓவியங்கள் இருந்தன. எந்த ஓவியம் உன்னைக் கவர்ந்தது?” என்று கேட்டார் துறவி.

“ஓவியங்கள் இருப்பதைப் பார்த்தேன். அவற்றை நன்றாகக் கவனிக்கவில்லை” என்றான் அவன்.

இப்படியே அவர் எதைக் கேட்டாலும் நன்றாகப் பார்க்கவில்லை என்று பதில் சொன்னான் அவன்.

“இந்த மாளிகையைச் சுற்றிப் பார்க்கவில்லையா? என்ன கேட்டாலும் நன்றாகப் பார்க்கவில்லை என்றே பதில் சொல்கிறாய்” என்று கேட்டார் அவர்.

“கிண்ணத்தில் உள்ள எண்ணெய் சிந்தக் கூடாது என்பதில் கவனமாக இருந்தேன். அதனால் மாளிகையை நன்றாகப் பார்க்கவில்லை” என்றான் அவன்.

“அப்போது அதே எண்ணெய்க் கிண்ணத்துடன் செல். மாளிகையை நன்றாகச் சுற்றிப் பார்த்துவிட்டு வா. ஒவ்வொரு இடத்தைப் பற்றியும் விசாரிப்பேன்” என்றார் துறவி.

திரும்பிய அவன் மாளிகையின் அழகை அவரிடம் வருணித்தான்.

கிண்ணத்தை அவனிடம் வாங்கிய அவர் வழிய வழிய எண்ணெய் ஊற்றித் தந்தேன். “எண்ணெய் குறைகிறதே” என்று கேட்டார்.

“மாளிகையின் அழகைப் பார்ப்பதில் கவனமாக இருந்தேன். எண்ணெய் சிந்தியதைக் கவனிக்கவில்லை” என்றான்.

“உலகத்தில் நடக்கும் எல்லாவற்றையும் நாம் ஆர்வத்ததுடன் கவனிக்க வேண்டும். அதே சமயம் கிண்ணத்தில் உள்ள எண்ணெய்

ஒரு சொட்டும் சிந்தக் கூடாது என்றார், இதுதான் மகிழ்ச்சியின் இரகசியம்" என்றார் துறவி.

**அறிவோடு விழிப்பாயிரு** – வேதாத்திரியம்


"ஒன்றிப் புள்ளியாய் ஒடுங்கி நீ இரு.
அன்றி விரிந்திடில் ஆராய்ச்சி யோடிரு.
நின்றிடு அகண்டாகார நிலையினில்.
வென்றிடுவாய் புலன் ஐந்தையும்." வெற்றியே." (ஞாக.பா.1488)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 37. ஞானியின் வாழ்க்கை

### (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் ஞானி பொகொசுவிடம் ஒருவர் "நீங்கள் எப்படி வாழ்க்கை நடத்துகிறீர்கள்?" என்று கேட்டார்.



"எளிமையாக வாழ்கிறேன். பசி எடுக்கும் போது சாப்பிடுகிறேன். தூக்கம் வரும் போது தூங்குகிறேன் என்றார் ஞானி.

இப்படி ஒரு பதிலை எதிர்பாராத அவர் "உங்களைப் போலத்தான் நாங்களும் எளிமையாக வாழ்கிறோம். பசி எடுத்தால் சாப்பிடுகிறோம். தூக்கம் வந்தால் தூங்குகிறோம்" என்றார்.

இதைக் கேட்ட ஞானி சிரித்தபடி "நீங்கள் சாப்பிடும் போது சாப்பிட மட்டுமா செய்கிறீர்கள்? வீண் பேச்சுப் பேசிக் கொண்டே சாப்பிடவில்லையா? எத்தனை சிந்தனை, எத்தனை கற்பனைக ளுடன் நீங்கள் சாப்பிடுகிறீர்கள்.

தூங்கும் போது எப்போதாவது ஆழ்ந்து உறங்கி இருக்கிறீர்களா? தூக்கத்தில் நீங்கள் அலறுவது இல்லையா? பிதற்றுவது இல்லையா? கனவு காண்பது இல்லையா?

நான் எதைச்செய்தாலும் உண்மையாகவும் முழுமையாகவும் செய்கிறறேன்.

தூங்கினால் ஆழ்ந்த தூக்கம்தான். பொகொசு என்ற மனிதனே அங்கே இருப்பது இல்லை. சாப்பிடும் போதும் அப்படித்தான்" என்றார் ஞானி.

## ஞானிகளின் கருத்தாராய்வீர் – வேதாத்திரியம்.

"தனிமனிதன் கடமைகளும், கூட்டு வாழ்வின்
　தத்துவமும் அடங்கியுள்ள இத்திட்டத்தால்
மனிதஇனம் பஞ்சமகா பாத கத்தை
　மனத்தினிலே நினைந்திடவும் வழியே இல்லை!
புனிதர்களாம் புத்தர், இயேசு, நபிகள், காந்தி,
　பூஜ்யர் பரஞ்சோதி மற்ற ஞானியார்கள்
கனிவுடனே உலகமக்கள் உயர்வாய் வாழக்
　கண்டகனவும் செயலில் மலர்ந்து நிற்கும்." (ஞாக.பா.977)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 38. ஆன்மீக முன்னேற்றமா?

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் குரு ஒருவரிடம் சீடன் ஒருவன் நீண்ட காலம் கல்வி கற்றான். அவரிடம் விடைபெற்ற அவன் அங்கிருந்து புறப்பட்டான்.

"நீ ஆன்மிக வழியில் எவ்வளவு முன்னேறிக் கொண்டிருக்கிறாய் என்பதை அறிய ஆவலாக உள்ளேன். ஆன்மிக முன்னேற்றம் குறித்து ஒவ்வொரு மாதமும் எனக்கு கடிதம் எழுது" என்றார் குரு.

“அப்படியே செய்கிறேன்” என்றான் அவன்.

முதல் மாதம் அவனிடம் இருந்து அவருக்குக் கடிதம் வந்தது. அதில் இறைவன் எல்லாப் பொருள்களிலும் உள்ளார் என்பதை அறிந்து கொண்டேன் என்று எழுதி இருந்தான்.

அதைப் படித்த அவர் ஏமாற்றம் அடைந்தார்.

அடுத்த கடிதத்தில் அவன் எல்லாப் பொருள்களும் ஒன்றுதான் என்ற உண்மையை அறிந்து கொண்டேன் என்று எழுதி இருந்தான்.

படித்த அவர் அந்தக் கடிதத்தைத் தூக்கி எறிந்தார்.

மூன்றாவது கடிதத்தில் அவன் யாரும் பிறப்பதும் இல்லை. இறப்பதும் இல்லை.  நான் என்பதே இல்லை என்ற எழுதி இருந்தான்.

இதைப் படித்த அவர் சலிப்பு அடைந்தார்.

அதன் பிறகு அவனிடம் இருந்து கடிதம் எதுவும் வரவில்லை.

நான்கைந்து மாதங்கள் கழிந்தன.

கடிதம் எழுதுவது குறித்துச் சீடனுக்கு நினைவுபடுத்த நினைத்தார்.

உன் ஆன்மிக முன்னேற்றம் குறித்து மாந்தோறும் கடிதம் எழுதுவதாகச் சொன்னாய்  ஆறு மாதமாக எந்தக் கடிதமும் வரவில்லை என்று எழுதினார் அவர்.

அதற்குச் சீடன் பதில் எழுதி இருந்தான்.  அதில் ஆன்மிக முன்னேற்றமா?  அதைப் பற்றி யார் கவலைப்படுகிறார்கள்?  என்று இருந்தது.

இதைப் படித்த அவர் “கடவுளே! என் சீடன் ஆன்மிக முன்னேற்றத்தில் உயர்ந்த நிலையை அடைந்து விட்டான்” என்று மகிழ்ச்சி பொங்கச் சொன்னார்.

தன்னையறிந்து முழுமைபெற வாரீர்! – வேதாத்திரியம்

“தெய்வத்தின் திருவியாட்டரங்கமே உடலுயிர். இவ்
வுய்யும் ஒருபெருமை உலகமக்கள் உணர்வதற்கு
மெய்விளக்கத் தவவிளக்கம் மேலாம். தத்துவத் தெளிவு
செய்வதுதான் சிறந்ததொண்டு. சிந்தனை மிக்கோர் சேர்விர்?”
(ஞாக.பா.977)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 39. சீடனாக என்ன தகுதி?

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் குரு ஒருவர் தம்மிடம் சீடனாகச் சேர வருபவர்களை சோதனை வைத்தே சேர்த்துக் கொள்வார்.

அவர் வைக்கும் சோதனை மற்றவர் வைக்கும் சோதனைப் போலக் கடுமையானது அல்ல, எளிமையானது.

சீடனாகச் சேர வருபவர்களிடம் அருகில் உள்ள குளத்தைக் காட்டுவார்.

“அங்கே சென்று அந்தக் குளத்தைப் பார்த்துக் கொண்டே சிறிது நேரம் இருங்கள். இங்கே வந்து என்ன பார்த்தீர்கள் என்று சொல்லுங்கள்” என்பார்.

அவர்கள் சொல்லும் பதிலை வைத்துச் சிலரைச் சீடர்களாகச் சேர்த்துக் கொள்வார். சிலரைத் திருப்பி அனுப்பி விடுவார்.

அந்த மடத்திற்கு அருகில் வாழ்ந்த பெரியவர் ஒருவர் இதைக் கவனித்தார். சீடர்கள் சொல்லும் பதிலை வைத்து எப்படிச் சீடர்களைத் தேர்ந்து எடுக்கிறார் என்று அறிய ஆர்வம் கொண்டார்.

குருவிடம் வந்த அவர் " சீடனாகச் சேர வருபவர்களைக் குளத்திற்கு அனுப்புகிறீர்கள். அவர்கள் சொல்லும் பதிலை வைத்து எப்படிச் சீடர்களைத் தேர்ந்து எடுக்கிறீர்கள்" என்று கேட்டார்.

"தெளிந்த குளத்து நீரின் அருகே அவர்கள் சிறிது நேரம் நிற்பார்கள். அவர்களின் நிழல் தண்ணீரில் தெளிவாகத் தெரியும். குளத்துத் தண்ணீரில் மீன்களும் துள்ளும். குளத்தைப் பார்த்துவிட்டு வரும் சீடர்களால் இரண்டு பதில்களைத்தான் சொல்ல முடியும்.

குளத்தில் என் தோற்றம் தெரிந்தது என்பவனைச் சீடனாக ஏற்றுக் கொள்ள மாட்டேன். நான் என்ற எண்ணம் உடையவனுக்கு யாராலும் ஞானத்தைக் கற்பிக்க முடியாது. மீன்கள் துள்ளுகின்றன என்பவனைச் சீடனாக ஏற்றுக் கொள்வேன்" என்று விளக்கம் தந்தார் குரு.

## பிரம்மமே அறிவு, அதுவே "நான்" – வேதாத்திரியம்

""நான் யார்?" யார் என்றறியும் பேரார்வத் தாலே,
 நாட்கள் மாதம் ஆண்டு பலப்பல கழித்தேன்.
ஊன்உருவில் உள்ளியங்கும் சூக்குமத்தை, உயிராய்
 உணர்ந்தபின்னர், உயிர்ச்சுழலின் அலைக்காந்தம் கண்டேன்.
வான்பொருளாம் காந்தமது பஞ்சதன் மாத்திரையாய்
 வாழும் உயிரில் மனமுமாய் இயங்கக் கண்டேன்!
மேன்மையான இவ்வரிசைகளின் காந்தஆற்ற லுக்குள்,
 மிகச்சிறந்த இறைநிலையும் அறிவும் ஒன்றாய்க் கண்டேன்!"
(ஞாக.பா.1726)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.


# 40. புத்த தத்துவம் ஒரே வரியில்
## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் தத்துவ ஞானியாகிய சுசுகி ரோசி என்பவர் புத்தமதத்தைப் பற்றிப் பல ஆண்டுகளாகச் சொற்பொழிவு செய்து வந்தார்.

அவருடைய சொற்பொழிவுக்குப் பிறகு கலந்துரையாடல் நிகழ்ச்சியும் நடக்க இருந்தது.

நிறைய பேர் கலந்து கொண்டார்கள்.

ஆராய்ச்சி மாணவர் ஒருவர் “சுசுகி ரோசி அவர்களே! நீங்கள் நீண்ட நேரம் சொற்பொழிவு செய்தீர்கள். எனக்கு எதுவும் புரியவில்லை.



புத்த சமயக் கொள்கைகளைச் சுருக்கமாக ஒரே வரியில் சொல்ல முடியுமா?” என்று கேட்டார்.

அங்கிருந்த எல்லோரும் சிரித்தார்கள். அவர்களுடன் சேர்ந்து சுசுகி ரோசியும் சிரித்தார்.

“எல்லாம் மாறக் கூடியது” என்ற அவர் “அடுத்த கேள்வியைக் கேட்கலாம்” என்றார்.

நிலையாமையை நினைவிற்கொள் – வேதாத்திரியம்

“பிறப்பு இறப்பு நடுவே பூவுலக வாழ்வு. இதை
மறப்பு நிலையில் உள்ள மதியின் போக்கே மாயை.” (ஞாக.பா.800)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 41. பொறுமை தேவை

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

சீடர்கள் பொறுமை இல்லாமல் பரபரப்புடன் செயல்படுவதைக் கவனித்தார் புத்தர். பொறுமையைப் பற்றி அவர்களுக்கு அறிவுறுத்த நினைத்தார்.



சீடன் ஒருவனை அழைத்த அவர் “அருகில் உள்ள குளத்திற்குச் சென்று தண்ணீர் கொண்வா” என்றார்.

பானை ஒன்றை எடுத்துக் கொண்டு குளத்தை அடைந்தான் அவன்.

அப்போது அந்தக் குளத்தில் இருந்த எருமை மாடுகள் வெளியே வந்து அங்கிருந்து சென்றன.

எருமை மாடுகள் கலக்கியதால் குளத்து நீர் சேறும் சகதியுமாக உள்ளது. ஐந்து கல் தொலைவில் இன்னொரு குளம் உள்ளது. அங்கே சென்று தண்ணீர் எடுத்து வருகிறேன்” என்றான்.

“அங்கே சென்று திரும்ப நீண்ட நேரம் ஆகும். சிறிது நேரம் பொறுமையாக இரு.  இந்தக் குளத்திலேயே தண்ணீர் எடுக்கலாம்” என்றார் புத்தர்.

சிறிது நேரம் சென்றது.  குளத்திற்குச் சென்ற அவன் தண்ணீர் தெளிந்து இருப்பதைப் பார்த்தான்.

தண்ணீர் எடுத்து வந்தான்.

அந்த தண்ணீரை எல்லோரும் குடித்தார்கள்.

அவர்களைப் பார்த்துப் புத்தர்  “எந்தச் செயலைச் செய்தாலும் பரபரப்போ அவசரமோ காட்டக் கூடாது.  குழப்பம் அடைந்து இருந்தால் பொறுமையாக இருங்கள்.  சேறும் சகதியுமாக இருந்த குளத்துத் தண்ணீர் தெளிவு அடைந்ததைப் போல உங்கள் உள்ளமும் தெளிவு அடையும்.  பொறுமையைக் கடைபிடிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்” என்று அறிவுரை சொன்னார்.

- “பொறுமையாக இருப்பது ஒரு பலமான கவசம்.  எவ்வளவு பெரிய குழப்பமானாலும் பொறுமை ஒன்றினாலேயே வெற்றி கண்டுவிடலாம்.  கர்வம் இதற்கு உதவும்.” (வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம்.  ஆனந்தமாக வாழ்வோம்.  வாழ்க வளமுடன்.

Yout ube  channel

Vet hat hi ri am Banukumar

ஜென்னும் வேதாத்திரியமும்

# பாகம் 4

1. புகழும் இகழும் https://youtu.be/QJxaz-vhku8
2. உள்ளம் உருகி நின்றேன் https://youtu.be/SGXFw5V49xg
3. புத்தர் எழுப்பிய கேள்விகள் https://youtu.be/fEDHKKOQ6Y4
4. புத்தரின் மகாசமாதி https://youtu.be/68hrmbvFlU8
5. இன்பம் நிலைக்க வழி https://youtu.be/w1MdQpdxzKE
6. பழிப்போரையும் வாழ்த்து https://youtu.be/ejRFBDHsgxM
7. காலம் எனக் கருதும் மனம் https://youtu.be/sDhF_NDRMtU
8. ஞானம் என்றால் https://youtu.be/KYNkzwmHtQI
9. எது அதிசியம்? https://youtu.be/GtCi6U7dc9s
10. மனம் ஒரு வியப்புக்குரிய இயக்கம் https://youtu.be/Bie_ySlI86g
11. விழிப்பு நிலையில் வாழ்வோம் https://youtu.be/cQGigne0Y8g
12. முழுமையும் முழுமைப்பேறும் https://youtu.be/8SKwdkBcw9o
13. நன்றியுணர்வும் கடமையுணர்வும் https://youtu.be/5t8Cxv17Wcc
14. அணுவே எல்லாம் https://youtu.be/enks9PXzYww
15. நினைவை சுமக்காதே https://youtu.be/tA8GUV2ozrI
16. ஞானமடைந்த மனிதன் https://youtu.be/5lQrur9ksL4
17. குற்றங்களும் தண்டனைகளும் https://youtu.be/zXXSyhbEc9w
18. புனித நிலை குருநாதர் https://youtu.be/MjE89X5N_iQ
19. ஞானிகளின் சிறப்பு https://youtu.be/nEZUCM6a6FI
20 .ஞானநிலைகள் https://youtu.be/aP7HL64owPg
21. தொண்டில் உயர்வு தாழ்வு வேண்டாம்?
https://youtu.be/dWIP9EAJoj4
22. ஆசிரியர் பெருமை https://youtu.be/zJKjvAR-x2Q
23. ஆற்றல்கள் வீணாகாது https://youtu.be/BeL0ARncuqY
24. கூடி வாழும் பண்பு? https://youtu.be/KTQ4H2cycc0
25. கோபத்தில் சத்தம் ஏன்? https://youtu.be/Z5DH63cvSMJ
26. அன்பு வழியில் https://youtu.be/599zY08rC-Y
27. அன்பின் செயல் https://youtu.be/-XbjdvDjQdg
28. உழைத்தால் சாப்பிடு https://youtu.be/aWIn5m1Qpr8
29. ஜென் குருவும் ஒன்பது திருடர்களும் https://youtu.be/vNuXRRXWaHY
30. வைர சூத்திரம் https://youtu.be/WRqJpGBm9RA
31. பசியும் தாகமும் தந்தது யார்? https://youtu.be/xiIKbkruGeU

32 .பழுத்த ஞானம் https://youtu.be/n-d5bPPdFLs
33. வாழ்நாள் எவ்வளவு தேவை? https://youtu.be/vo-EUCYvUUo
34. தேர் உள்ளதா? https://youtu.be/9_1Vue0FLqY
35. உண்மையைக் காணப் பல வழிகள் https://youtu.be/y5guwUr1D4s
36. மகிழ்ச்சியின் இரகசியம் https://youtu.be/XPONI19nQDg
37. ஞானியின் வாழ்க்கை https://youtu.be/8DmjIOwhyvC8
38. ஆன்மீக முன்னேற்றமா? https://youtu.be/on8N2NMfcVY
39. சீடனாக என்ன தகுதி? https://youtu.be/TKIzqgRZMbI
40. புத்த தத்துவம் ஒரே வரியில் https://youtu.be/GW_WnbI_6bw
41. பொறுமை தேவை https://youtu.be/D59mzIKN7IM

## துணைநின்ற நூல்கள்


1. ஜென் கதைகள், இணையதளம்
2. ஞானக்களஞ்சியம் பாகம் 1 & 2, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
3. ஞானமும் வாழ்வும், வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
4. மாக்கோலமாய் விளைந்த மதி விருந்து, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, பாகம்1.2.3. விஜயா பதிப்பகம், கோவை.
6. ஞானம் தரும் ஜென் கதைகள், அம்பிகா சிவம், கிளாசிக் பப்ளிகேஷன்ஸ், சென்னை.
7. ஜென் கதைகள், ஏ.சோதி, நன்மொழிப் பதிப்பகம், புதுச்சேரி
8. ஜென் கதைகள், உதயதீபன், மீனாட்சி பதிப்பகம், சென்னை
9. உலக சமாதானம், வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
10. Zen Stick – karn Rahul - Kindly Store
11. Tanya"s Collection Of Zen Stories – Schmid Tanya

# ஆசிரியரின் பிற நூல்கள்

PDF www.banukumar.in

## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்

8. “வாழ்க வளமுடன்” என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்

13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்திதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே

## திருவாசகமும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து

14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுனவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?

6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்

## ஆராய்ச்சி

1. நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

# vethathiri am banukumar (Youtube channel)

2000 க்கும் மேற்பட்ட விடியோக்களை அடியிற்கண்ட 106 தலைப்புகளில் கேட்டு மகிழலாம்.

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்

2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும்
8. வேதாத்திரியமும் ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்பக் ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30.வேதாத்திரியப் பார்வையில்தி ருவாசகத்தின் அச்சோ பதிகம்
31.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
32.மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33.புத்தக வெளியீடு
34.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3

37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38.வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47.காலமெல்லாம் வேதாத்திரியம்
48.வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49.என்னைச் செதுக்கிய நூல்
50.தினசரி தியானம் சனவரி
51.தினசரி தியானம் பிப்ரவரி
52.தினசரி தியானம் மார்ச்
53.தினசரி தியானம் ஏப்ரல்
54.தினசரி தியானம் மே
55.தினசரி தியானம் ஜூன்
56.தினசரி தியானம் ஜூலை
57.தினசரி தியானம் ஆகஸ்டு
58.தினசரி தியானம் செப்டம்பர்
59.தினசரி தியானம் அக்கோபர்
60.தினசரி தியானம் நவம்பர்
61.தினசரி தியானம் டிசம்பர்
62.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5
67.தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1
69.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71.தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு

72.மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73.ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74.ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75.ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76.புலவர் தியாகராஜனார்
77.ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1
78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82.ஆன்மீகம் ஆன்மீகம்
83.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86.தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87.சுயமுன்னேற்றம்
88.பத்திரகிரியார் சிந்தனைகள்
89.மன்னார்குடி
90.ஆராய்ச்சி நன்மக்கட்பேறு
91.பொதுவானவை
92.மனைவிக்கு மரியாதை
93.திருமூலர் சிந்தனைகள்.
94.ஆண்டாள் சிந்தனைகள்
95.திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96.திருக்குறள; சிந்தனைகள்
97.அப்பர் சிந்தனைகள்
98.பட்டினத்தார் சிந்தனைகள்
99.பட்டினத்தார் ஒப்பாய்வு
100.சிவவாக்கியார் சிந்தனைகள்
101.ஔவையார் சிந்தனைகள்
102.சித்தர்கள் சிந்தனைகள்
103.திருமங்கையாழ்வார்
104.வள்ளலாரின் சிந்தனைகள்
105.பசி என்னும் பாவி
106.பொருள் வறுமையா? அறிவு வறுமையா?

107.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
108.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
109.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
110.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
111.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
112.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
113.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
114.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
115.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து
116.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்